ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4 அத்தியாயம் 4.

கூலிகள் குடியிருப்பு.

நமது சமூகத்திற்கே இன்றியமையாத பெரும் வேலைகளை செய்கிறவர்களை, ஹிந்துக்களாகிய நாம் "தீண்டாதார்" என்று விலக்கி ஒரு சேரியில் ஒதுக்கித் தள்ளியிருக்கிறோம். இச் சேரிகளுக்கு குஜராத்தில் "தேத்வாதா" என்று பெயர். இவைகளைப்பற்றித் தனியாக ஒரு அருவருப்பான உணர்ச்சி ஏற்படுகிறது. கிறிஸ்தவ மதம் பரந்த ஐரோப்பாவில் இவ்வாறு 'யூதர்கள்' அருவருப்பானவர்களாய் தீண்டாதார் என்று விலக்கப்பட்டிருந்த காலம் உண்டு. அவர்களுடைய வாசஸ்தலங்களுக்கு "கெட்டோ" என்று பெயர். இன்றைய தினம் தென்னாப்பிரிக்காவில் நாம் இதே மாதிரி தான் நடத்தப்படுகிறோம். ஸ்ரீ. ஆண்ட்ரூவின் தியாகமும் ஸ்ரீ. சாஸ்திரியின் சாதுரியமும் நமக்கு என்ன அனுகூலஞ் செய்யக்கூடுமென்பது இனி மேல தான் தெரிய வேண்டும்.

யூதர்கள் ஆதிகாலத்தில் தாங்கள் தான் கடவுளுக்கு நெருங்கிய தூதர்கள் என்கிற வகையில் நடந்து கொண்டார்கள். அதற்குத் தகுந்த கூலி அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. ஹிந்துக்களும் அதே மாதிரி ஆரியர்கள் தான் நாகரீகமடைந்தவர்கள் என்றும், ஆரியரல்லாதார் எல்லாம் "தீண்டாதார்" என்றும் சொல்லி வந்தார்கள். இப்பொழுது இதற்குக் கைமேல் கூலி கிடைத்து வருகிறது. தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள் படும் கஷ்டம் இந்தக் கர்ம பலன் தான். முகம்மதியரும், பார்ஸிகளும் ஹிந்துக்கள் போல் ஒரே நிறத்தவராயும், ஒரே நாட்டினராயும் இருப்பதால், அவர்களுக்கும் இந்த கதி வாய்த்திருக்கிறது.

இந்த அத்தியாயத்தில் இந்தியக் கூலிகள் இருப்பிடத்தைப் பற்றி எழுத உத்தேசித்திருக்கிறேன். தென்னாப்பிரிக்காவில் நாம் எல்லோருக்கும் "கூலி" என்று தான் பெயர் வழங்கி வருகிறது. இந்தியாவில் சாதாரணமாய் கூலி என்னும் பதம் கூலிக்கு மூட்டை தூக்கியோ வேறெவ்வகையிலோ உழைக்கிறவர்களுக்குத் தான் பொதுவாக உபயோகிக்கப்படுகிறது. தென்னாப்பிரிக்காவில் சாதாரணமாய் நாம் தீண்டாதார் என்பவரைக் குறிப்பிட பறையர் என்னும் சொல்லை உபயோகிப்பது போலவே, அது வழங்கி வருகிறது.

கூலிகளுக்கு என்று தனியாக ஒதுக்கி வைக்கப்பட்ட இடங்களுக்கு "கூலி குடியிருப்பு"ஸ்தானங்களென்று பெயர். ஜொஹான்ஸ்பர்க்கில் இவ்வாறு ஒரு குடியிருப்பு ஸ்தலம் இருக்கிறது. ஆனால் மற்ற இடங்களில் உள்ளதைப் போல் இங்கு இந்தியர்களுக்கு பூர்ண சுதந்திரம் கிடையாது. 99 வருஷக் குத்தகையில் தான் அவர்கள் அந்த ஸ்தலத்தை வாங்கியிருந்தார்கள். ஜனத்தொகை அதிகரிப்பதற்கேற்ப, இடமும் விஸ்தாரமாகவில்லை. இந்த ஸ்தலத்திலுள்ள கக்கூஸ்களை சுத்தம் ஒருவாறு செய்ய ஏற்பாடு செய்ததைத் தவிர, முனிசிபாலிட்டியார் வேறு ரோடு வசதி, விளக்கு சௌகரியம் ஒன்றும் செய்து கொடுக்கவேயில்லை. ஆங்கு வசித்த இந்தியர்களுக்கோ முனிசிபல் சட்ட திட்டங்கள் ஒன்றும் தெரியாது. முனிசிபாலிட்டியின் மேற் பார்வையின்றி சுகாதார விஷயங்களை கவனித்துக்கொள்ள சக்தியற்றவர்கள். இவர்களோ கடலில் கப்பல் உடைந்து தவித்து அவ்விடத்தில் போய் கரை யேறியவர்கள்? இல்லை. சாதாரணமாய் பிற நாடுகளில் போய் குடியேறுகிறவர்கள் வியாபாரஞ் செய்யவும் திரவியம் தேடவுமே தான் செல்வது வழக்கம். தென்னாப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்களில் பெரும் பான்மையோரோ ஒன்றும் அறியாத ஏழை விவசாயிகள். அவர்களுக்கு எல்லா சௌகரியங்களும் செய்து கொடுத்தாக வேண்டியிருந்தது. அவர்களுக்குப் பின்வந்து குடியேறிய படித்த இந்தியர்களும் வர்த்தகர்களும் வெகு சொற்பமானவர்கள் தான்.

முனிசிபாலிட்டியார் இவ்வாறு அசிரத்தை பாராட்டியதாலும், இந்திய ஜனங்களும் மூடர்களாயிருந்ததாலும், இவர்கள் குடியிருந்த இடம் மிகவும் அசுத்தமாக, சுகாதாரக் குறைவாக இருந்தது. முனிசிபாலிட்டியார் இந்த நிலைமையை சீர்படுத்துவதை விட்டு, சுகாதாரக் குறைவை முன்னிட்டு அந்த இடத்தை அழித்து விடுவதற்கு சட்டசபையினிடம் அதிகாரம் பெற்று, ஏழை இந்தியர்களை வெளிக்கிளப்ப யோசித்தனர். நான் ஜொஹான்ஸ்பர்க்கில் போய்ச் சேர்ந்தபோது நிலைமை இவ்வாறு இருந்தது.

தாங்கள் குடியிருந்த இடத்தைச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டியது அவசியமாயிருந்தது. இதற்காக ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டது. முனிசிபாலிட்டியார் அளித்த தொகையை ஒப்புக்கொள்ளாதவர் இத்தக்கமிஷனுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். இதில் முனிசிபாலிட்டியைவிட அதிகப்பணம் கொடுக்க உத்தரவு செய்யப்பட்டால் முனிசிபாலிட்டியே எல்லா செலவு தொகையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று இருந்தது.

இந்தியக்குடிகள் பலர் என்னை வக்கீலாக அமர்த்தினார்கள். இந்த வழக்குகள் மூலம் பணம் சம்பாதிக்க நான் விரும்பவில்லை. ஆகவே அவர்களுக்கு ஜெயிக்கிற வழக்குகளில் கோர்ட்டார் அளிக்கும் செலவு தொகையைக் கொடுத்தால் போதுமென்றும் இதர வழக்குகளில் வழக்கு ஒன்றுக்கு 10 பவுன் கொடுத்தால் போதுமென்றும் தெரிவித்தேன். இந்த வழக்குகளில் வரும் தொகையில் பாதியை ஒரு ஆஸ்பத்திரிகட்டுவதற்கோ, வேறேதாவது ஒரு தர்மகாரியத்திற்கோ ஒதுக்கி வைக்கப் போகிறதாகவும் சொன்னேன். இது அவர்களுக்குத் திருப்தியளித்தது.

70-வழக்குகள் வரையில் இவ்வாறு நடந்தன; ஒன்றே ஒன்றுதான் தோற்றுப் போயிற்று. எனவே, நல்லவரும்படி எனக்குக் கிடைத்தது. ஆனால் இதில் சுமார் 1600 பவுன் "இந்தியன் ஒப்பீனியன்" பத்திரிகைக்குச் செலவாகிவிட்டது. அந்த வழக்குகளில் நான் மிகுந்த பிரயாசைப்பட்டேன். எப்பொழுது பார்த்தாலும் என்னைக் கட்சிக்காரர்கள் சுற்றிக் கொண்டிருந்த வண்ணமாயிருக்கும். இவர்களில் பெரும்பான்மையோர் பீகாரில் ஒப்பந்தக் கூலி வேலை செய்தவர்கள்; தென்னிந்தியாவிலிருந்தும் பலர் வந்திருந்தார்கள். இவர்கள் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்கென்று இந்திய வியாபாரிகளிடமிருந்து தனித்து ஒரு சங்கம் அமைத்துக்கொண்டிருந்தார்கள். இவர்களுள் வெகு உயரிய நோக்கமும், தாராளசிந்தையும் படைத்த சிலர் இருந்தார்கள். ஸ்ரீ. ஜெயராம்சிங் என்பவர் அவர்களுக்குத் தலைவர். ஸ்ரீ. பதாரி என்பவரும் வெகு முக்கியமானவர். இவர்கள் இருவரும் இப்பொழுது இறந்துபோய்விட்டார்கள். இரண்டு பேரும் எனக்குப் பேருதவி புரிந்தனர். ஸ்ரீ. பதாரி என்னுடன் சத்தியாக்கிரக வேலையில் ஈடுபட்டு வெகு தீவிரமான ஊழியம் புரிந்தார். இவர்கள் மூலமாய் இன்னும் பல இந்திய சகோதரர்களுடன் சிநேகம் உண்டாயிற்று. அவர்களுக்கு ஒரு வக்கீல் போலல்லாமல், ஒரு சகோதரர்போலவே நான் ஆய்விட்டேன். அவர்களுடைய சுகதுக்கங்களில் எல்லாம் நான் கலந்து கொண்டேன்.

இந்தியர்கள் என்னை எப்படி அழைத்தார்கள் என்று கூறுகிறேன். சேட் அப்துல்லா என்னை காந்தி என்று கூப்பிடமாட்டேனென்று விட்டார். ஒருவரும் நல்லவேளையாய் என்னை "சாகிப்" என்றழைத்து அவமானப்படுத்தவில்லை. கடைசியில் அப்துல்லா சேட் "பாய்"—அதாவது சகோதரா-என்று அழைக்க ஆரம்பித்தார். மற்றவர்களும் அவரைப் போலவே அழைக்கத் தொடங்கினர். கடைசி வரையில் "பாய்" என்றே என்னை எல்லாரும் அழைத்து வந்தனர். ஒப்பந்தம் நீங்கிய இந்தியக்கூலிகள் அவ்வாறு அழைத்தபோது என் செவிக்கு அது வெகு மதுரமாயிருந்தது.

ஸ்ரீ கோவிந்தசாமி யோகிகள்.

(சென்றவாரத்தின் தொடர்பு.)

பெருநாழி மகா தபசிரேஷ்டர் கவிராஜ வீ. சங்குமுத்துப் பிள்ளை எழுதியது:—

ஜனங்கள் யோகிகளுக்கு முன் தேங்காயுடைத்து வைத்துக் கர்ப்பூர தீபங் காட்டி அதனை யெடுத்துக் கொண்டு போவதாயிருந்தனர். அது தமக்குப்பிரியமில்லாத செயல் என்று யோகிகள் பலதரம் அபிநயக் குறிப்பாற் காட்டி வந்தனர். எனினும் அவருக்குத் தெரியாமலே சுவர் மறைவில் வைத்து மேற்கண்டபடி வேலைகள் நடந்து வந்தன. அதனையும் யோகிகள் வெறுக்கின்றார் எனக் கண்டபின் ஆச்சிரமத்திற்குச் சற்று தூரத்தில் ஓர் கற்றூண் நிறுத்தி அதில் தேங்காய்களை மோதியுடைத்துக் கொண்டு செல்கின்றனர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் உடைபடும் தேங்காய்களுக்கு அளவில்லை. சுமார் இரண்டு மாதத்திற்கு முன் ஒரு நாள் பகல் 3-மணிக்குச் சில ஜனங்கள் வந்து யோகிகளைத் தெரிசித்துவிட்டுக் கர்ப்பூர தீபங் காட்டுவதற்குத் தாம்பாளங் கொடுக்கும்படி ஆச்சிரமத்திலிருந்தவர்களைக் கேட்டனர். அதற்கு அவர்கள் இங்கு இருந்த தாம்பாளம் எப்படியோ காணாமற் போய்விட்டது; கர்ப்பூர தீபம் போடுவதில் யோகிகளுக்கும் சம்மதமில்லாதிருக்கிறது; அதுகாரணம்பற்றித் தாம்பாளம் நாங்கள் வைத்துக்கொள்ளவில்லையென்று மறுமொழி பகர்ந்தனர். வந்தவர்கள் அயல் ஊரானபடியால் தீபம்போட்டு விபூதி யெடுத்துக்கொண்டு போக வேண்டுமென அவாவுற்ற ஒருவர் அ. முனியாண்டி நாடார் வீட்டிற்குப் போய் ஒரு வெண்கலத் தாம்பாளத்தை வாங்கிக்கொண்டு வந்து அதில் விபூதியைப் பரப்பி அதன்மீது கர்ப்பூரத்தை வைத்து நெருப்புக் குச்சியைக் கொளுத்துவதற்காகத் தட்டை நிலைப்படியில் வைத்தார். கணீரென்று ஒரு சத்தம் கிளம்பிற்று தீபத்தட்டு காணப்படவில்லை. ஆச்சிரமத்திற்கு வெளியில் பலபேர் நின்று கொண்டிருந்தனர். அவர்களைக் கேட்டதில் தங்களுக்கு ஒன்றும் தோன்றவில்லையென்று சொன்னார்கள். நேரமோ மாலை 4-மணி. தாம்பாளம் இன்னும் காணப்படவில்லை. யோகிகள் இருக்கும் ஆச்சிரமம் ஒரு சிறிய கட்டடம். அதில் அவருக்கு முன்பில் ஒரு முழ உயரமும் மூன்று முழ நீளமும் அரை முழ அகலமும் அமைந்த ஒரு கற்குவியல் திடீரென்று ஒரே நாளிரவில் ஆச்சிரமத்திற்குட் காணப்பட்டது. அது மனிதர்களால் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவ்வாறு ஒருவர் அடுக்கி வைத்ததாகவும் வெளிப்படவில்லை. அடுக்கிவைக்க அவசியமுமில்லை. யோகிகளும் எழுந்துபோகிறவரல்லர். ஒரே நாளிரவில் கற்குவியல் வந்ததற்குக்காரணம் தெரியவில்லை. போய்வருகிற ஜனங்களைக் கேட்டால் தானே வளர்ந்ததென்கிறார்கள். கற்கள் ஆச்சிரமத்திற்கருகில் இயல்பாகக் கிடக்கும் கற்களைப் போல தெரியவில்லை. கற்குவியல் இரண்டுவண்டிப் பாரமிருக்குமென்று தோன்றுகிறது. பின்னும் பற்பல அற்புதங்கள் நடந்து வருவதாகப் பலரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவைகள் எதுமட்டிலும் உண்மையோ அதனைப் போகப் போகத்தான் கண்டறிய வேண்டும்.

கண்வலி வயிற்றுவலி முதலிய ரோகமுடையவர்களும் தேள்கடி பாம்புக்கடி யுண்டவர்களும் வந்து தரிசித்து நோய் நீக்கம்பெற்று வருவதாகச் சொல்லுகிறார்கள்! நானும் அந்நோயாளிகள் சிலரிடம் அஃதுண்மையா என்று கேட்டேன்; ஆம் என்று அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். யோகிகளுக்கு சுமார் 25 வயதிருக்கலாமெனத் தோன்றுகிறது. இவர் இந்நிலையில் மாறுபடாதிருப்பரேல் "வேண்டு சித்திகள் உலகயார்க்கத்தில் வைப்பர்" என்று பல அறிஞரும் எண்ணுகின்றனர்.

களக்கமறப் பொதுநடநான் கண்டு
[கொண்ட தருணங்
கடைச்சிறியேனுளம் பூத்துக்காய்த்த
[தொருகாய்தான்
விளக்கமுறப்பழுத்திடுமோ வெம்பி
[யுதிர்ந்திடுமோ
வெம்பாதுபழுக்கினுமென் கரத்திலகப்
[படுமோ
கொளக்கருது மலமாயைக் குரங்கு
[கவர்ந்திடுமோ
குரங்கு கவராதெனது குறிப்பிலகப்
[படினும்
துளக்கமறவுண்ணுவனோ தொண்டை
[விக்கிக் கொளுமோ
சோதி திருவுளமெதுவோ யாதுமறி
[யேனே"

என்று திருவருட்பிரகாச வள்ளலாராகிய சிதம்பரம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் திருவருட்பாவிலுரைத்த வண்ணம் அருட்பெருஞ்சோதியின் திருவுளம் எவ்வாறமையுமோ! எவரறியமுடியும்?

சுமார் 2 மாதங்களுக்கு முன் இராமநாதபுரம் சமஸ்தானாதிபதியவர்களான இராஜராஜேஸ்வர சேதுபதியவர்களாகிய மாட்சிமை தங்கிய பி. முத்துராமலிங்க சேதுபதி மஹாராஜா அவர்களின் தம்பியாராகிய மாட்சிமை தங்கிய ராஜாராம பாண்டி மஹாராஜா அவர்கள் யோகிகளைப் பார்க்க வந்திருந்தார்கள். அவர்களுடன் ஒரு சாமியாரும் வந்தனர். அந்தச்சாமியார் கோவிந்தசாமி யோகிகளைப் பார்த்துவிட்டு இவர் அப்பியசித்து வருவது ஒரு சிறந்தயோகமுறையெனவும் அது கைகூடிவருமாயின் யாவராலும் பூசிக்கத்தக்க யோகசாலியே எனவும் அவர் கூறிச் சென்றனர். யோகிகள் தாண்டவவிநாயகர் கோவிலில் நிஷ்டைகூடியிருந்த காலத்தில் ஒருநாள் எ. சிதம்பரம் பிள்ளையவர்கள் குமாரர் கணபதியா பிள்ளை யென்பவர் யோகிகள் முன்னின்று கொண்டு இந்தக் கோவிந்தசாமி இக்கோவிலுக்கு வந்துசேர்ந்தபின்னர், ஆசாரஈனர்களும் உள்ளே பிரவேசிக்கும்படி நேர்ந்துவிட்டது என சகசமாகப் பேசினராம். அத்தருணமே யோகிகள் அவ்விநாயகர் கோவில் வாசலுக்குமேலுள்ள எழுதகச்சுவரைக் கையால் சுட்டிச் சைகை செய்தனராம். அதில் ஒரு பெரும்பாம்பு நெளிந்துகொண்டிருந்தது. கண்டார் கணபதியா பிள்ளை. பாம்பென்றால் படையும் நடுங்குமல்லவா? பதறி வெளியிற் சென்றனர். பெருநாழியூருக்குள் இந்தச் சம்பவம் பரவிற்று. பற்பல ஜனங்கள் வந்து பாம்பை நேரில் கண்டனராம். யோகிகள் நிஷ்டையிலமர்ந்த இரண்டு வருஷங்களாக அவர் திருமேனியில் எண்ணெயாவது தண்ணீராவது மற்றொன்றாவது பட்டிருப்பதில்லை. சரீரம் எப்பொழுது பார்த்தாலும் பள பள வென்று தைலம் தேய்த்ததுபோல் விளங்குகின்றது. யோகிகளது தங்கை ஆதிமூலம்மாளும் விநாயகரைப் பூஜிப்பதும் தினம் ஒருவேளை சிறிது ஆகாரமே புசிப்பதுமாக இருந்துவருகிறார். கோவிந்தசாமி யோகிகள் அமர்ந்திருக்க ஆச்சிரமம் கட்டிக்கொடுத்தது தினமும் தவறாது பால் உணவும் கொடுத்துப் பின்னரும் வேண்டிய சௌகரியங்கள் செய்தும், செய்வித்தும் வருகிற அ. முனியாண்டிநாடா

(இதன் தொடர்ப்பு 7-ம் பக்கம் பார்க்க.)

11-வது நாடார் மகாநாடு.

4-வது அறிக்கை.

டிக்கட் விற்பனைப் பிரசாரம்.

நாடார் குல அபிமானிகளே!

சுமார் 17 வருஷங்களாக நம் குலத்தின் நலத்தினைக்கருதி முறையே பொறையாறு சென்னை, மதுரை, விருதுநகர், தூத்துக்குடி, சாத்தூர், சிவகாசி முதலிய நகரங்களில் முக்கியமாய் தென் ஜில்லாக்களில் 10 கான்பரன்ஸ்கள் வரையும் உலாவித்திரிந்து, சங்கம் ஜென்மித்த தஞ்சைஜில்லாவின் முக்கிய புண்ணிய க்ஷேத்திரங்களிலொன்றாகிய கும்பகோணத்தில் நடைபெறுவது நாடாருலகம் வீராவேசத்துடன் தனது வேலையை ஆரம்பிக்க இடமுண்டாகிறது. சங்கம் தலைவர் ஸ்தானத்தை புதிதாக ஒப்புக்கொண்ட ஸ்ரீமான் வெ. கனகசபைநாடார் அவர்களின் ஆட்சி ஆரம்பிக்கின்றது. தென் ஜில்லாக்களில் (மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி) டிக்கட் விற்பனைக்காக சங்கம் உபதலைவர் ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்களும், காரியதரிசிகள் ஸ்ரீமான்கள் பா. ம. பாண்டியநாடார், ஆ. அ. ஆறுமுகநாடார் அவர்களும் இன்னும் பிரபல முக்கியஸ்தர்களும் 4—9—27-ல் மோட்டார் வாகனத்தில் புறப்படுகிறார்கள். உபசாரணைக் கமிட்டி வைஸ் சேர்மன் ஸ்ரீமான் ஆ. ல. ம. கருப்பணசாமிநாடார், சாமிநாடார், செ. தங்கவேலநாடார், பொக்கிஷதார் அ. சாமிநாதநாடார், சேர்மன் சி. வெ. இரத்தினசாமிநாடார் இவர்கள் தங்களின் சகாக்களுடன தஞ்சாவூர், வட தென் ஆற்காடு ஜில்லாக்களின் பல பாகங்களிலும் சென்னையிலும் செங்கல்பட்டு ஜில்லாவிலும் சுற்றுப்பிரயாணத்திற்கு வெளியேறிவிட்டார்கள். சேலம், கோயம்புத்தூர், ஜில்லாக்களுக்கு நாடார் ஊழியப் பிரசாரசபை தலைவர் ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தரநாடார் அவர்களும் சங்கம் ஏஜென்ட் ஸ்ரீமான் ஏ. எம். எஸ். அண்ணாமலைநாடார் அவர்களும் 11—9—27ல் புறப்படுகிறார்கள்.

தென் திருவிதாங்கூர் சமஸ்தான வட்டகை பூராவும் இராமன்புதூர் ஸ்ரீமான் ஸ்ரீ கிருஷ்ணப்பெருமாள் நாடார் அவர்கள் 9—9—27 முதல் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். ஜலப்பிரதேசங்களுக்கு ரிஜிஸ்டர் மூலமாக அபிமானிகளுக்கு டிக்கட்கள் அனுப்பியிருக்கிறோம். விருதுநகர் நாடார் பரிபாலன சங்கத்தார்கள் மிகவும் தூண்டுதலான துண்டுப் பிரசுரங்களுடன் ஒத்துழைக்கின்றார்கள். வாலிப அபிமானிகள் உற்சாகத்துடன் லெட்டர்கள் வரைந்து கொண்டே இருக்கிறார்கள். ஏராளமான டெலிகேட்டுகள் வருகை எதிர்பார்க்கப்படுகிறது. கும்பகோணம் தேசாபிமானிகள் பரபரப்புடன் பேசிக்கொள்ளுகிறார்கள். கான்பரன்ஸின் தினம் 36 ஆலயங்களிலுள்ள விழாக்களும் ஒருங்கே நடைபெறும் தினம். சமீபமான நவராத்திரி தினம். நல்லதருணம் சென்னை மாகாணத்தில் சிங்காரத்தோட்டம் என்ற மகுடம்புனைந்த தஞ்சை ஜில்லா கும்பகோணம் கான்பரன்ஸ் நடபடிக்கைகளையும் கண்காக்ஷிகளையும் பாராத கண்கள் புண்களேயாகும். கும்பகோணம் அரண்மனைத் தோட்டத்தின் வனப்பை என்னென்று சொல்வது! 15-9-27க்கு மேல் ஸ்பெஷல் ட்ரெயின் சம்பந்தமாய் ஒழுங்கு செய்ய கம்பெனியாருடன் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

வி. சுடலைமுத்துநாடார்,
ஜெனரல் செக்ரெட்டேரி.

தோற்றங்கள்.

மகாநாட்டைப்பற்றிய அபிப்பிராயம்.

ஸ்ரீமான் ஏ. எம். எஸ். அண்ணாமலைநாடார் கும்பகோணத்திருந்து எழுதுவதாவது:—

கனவான்களே!

சென்ற இரண்டாண்டுகளாக சங்கம் பொருளாதார நிலைமைக் கருதியும், நமது குல ஏழைமாணவர்களின் ஸ்காலர்ஷிப் நிதியைக்கருதியும், சங்காபிமானிகளின் தீவிர முயற்சியாலும், பரஸ்பர ஒத்துழைப்பாலும் லாட்டரியின் வெற்றியால் ஒருவாறு ஜனசமூக வேலைகள் ஈடேறியதால் மகாநாடு குறித்த காலத்தில் நடைபெறாதுபோயினும் நமது சங்கம் ஜென்மித்த ஜில்லாவின் முக்கிய நகரங்களிலொன்றாகிய புண்ணிய க்ஷேத்திரமென்று புகழ்பெற்ற கும்பகோணம் நாடார்குல கனவான்களின் ஊக்கத்தால், நமது 11-வது மகாநாடு நடைபெறுவதற்கான வேலைகள் வெகு துரிதமாக உபசாரணைக்கமிட்டியார்கள் தயார் செய்து வருகிறார்கள். சொற்ப தலைக்கட்டுகள் கொண்ட இவ்வூர் நாடார்களின் வீரச்செயல்களையும் குலாபிமானத் தொண்டுகளையும் அபாரமான ஜனசமூக விருத்தியின் நன்னோக்கமும் நாடார்குல கனவான்களின் மனதைக் குதூகலமடையச் செய்வதுடன் மகாநாடு நடைபெறுவதற்கு பெரிய நகரங்களும் அதிக எண்ணங்களடங்கிய நாடார்களின் ஊர்களும் தேவையில்லையென்பதை செய்கையில் நிரூபித்துக் காட்டுகிறார்கள். நமது ஜனத்தொகையில் 3-வது 4-வது வரிசையில் நிற்கும் கோயம்புத்தூர், சேலம்ஜில்லா வாசிகள் 12-வது மகாநாட்டைக்குறித்த காலத்தில் வெகு சிறப்புடன் நடத்திவைக்க முன்வருவார்களெனத் தெரிய வருகிறது. எனினும் உடுமலைப்பேட்டை, நஞ்சுண்டாபுரம், மதுரைஜில்லாவில் பழனி, திண்டுக்கல் நாடார்குல கனவான்கள் சிறிது மனமுவந்தால் பெரிதும் நமது ஜனசமூக 12-வது மகாநாடு விமரிசையுடன் நடைபெற எதிர்பார்க்கலாம்.

கும்பகோணம் உபசாரணைக் கமிட்டியார்கள் தஞ்சாவூர், வட தென் ஆற்காடு, சென்னை, செங்கல்பட்டு ஜில்லாக்களில் டிக்கட்டு விற்பனைக்காக சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். மணியார்டர்கள் வந்து கொண்டிருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லா நாடார் கனவான்கள் ஏகமாய் வெகு உற்சாகத்துடன் கான்பரன்ஸ் வேலையில் ஈடுபட்டுழைக்கிறார்கள். ஆணித்தரமான தீர்மானங்களும் அவசியமான சீர்திருத்த மசோதாக்களும் தயார் செய்து தங்கள் தங்கள் நோக்கங்களுக்கு மெஜாரட்டியாரின் அபிப்பிராயங்களை நாடி, ஏராளமான டெலிகேட்டுகள் விஜயம் செய்வதற்கு வேண்டிய முயற்சி செய்து வருகிறார்கள். பிராமணர்—பிராமணரல்லாதார் இயக்கத்தில் தேர்ச்சிபெற்ற தஞ்சாவூர் ஜில்லா தேசநண்பர்கள் நாடார்களின் குதூகலமான கூட்டங்களுக்காக எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றார்கள். சங்கம் தலைவர் ஸ்ரீமான் வெ. கனகசபைநாடார் அவர்கள் பக்கப்பலமாக நின்று வேண்டும் ஒத்தாசைகள் புரிவதுடன் மகாநாடு முடிவடைந்தவுடன் ஜனசமூக வேலைக்காக சுற்றுப்பிரயாணம் செய்ய எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

வேர்விளை.

வேர்விளை (சிலோன்) ரோமன் பள்ளியில் 38—8—27 முதல் 4-9-27 வரை நித்திய பூஜையும், ஜெபமும் நடைபெற்றன. 4 வ. யன்று ஏழை எளியவர்களுக்கு தான தருமங்கள் நடைபெற்றன. இரா நேரங்களில் கண்ணைக் கவரும் வாணவேடிக்கைகள் நடந்தன. ஜெபத்திற்கு சுமார் 4000 ஜனங்கள் வரை வந்திருந்தனரென்று ஸ்ரீமான் பெ. தவமணி நாடார் எழுதுகிறார்.

கவுன்சில்மீட்டிங்கின் நடபடிக்கைகள்.

நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

1927-௵ ஆகஸ்டு௴ 31வ புதன் கிழமை மாலை 6-30 மணிக்குச் சங்கம் ஹாலில் நடைபெற்ற கவுன்சில் மீட்டிங்கின் நடபடிக்கைகள்.

சங்கம் வைஸ் பிரசிடெண்ட் ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் எம். எல். சி. அவர்கள் தலைமை வகித்தார்கள்.

அடியிற்கண்ட மெம்பர்கள் ஆஜராயிருந்தார்கள்.

ஸ்ரீமான்களான ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் பட்டி வீரன் பட்டி, பெ. சி. சிதம்பரநாடார் விருதுநகர், ஆ.லெ.ம. கருப்பணசாமிநாடார் கும்பகோணம், மு. வடிவேல்நாடார் சமையநல்லூர், வா. அ. புன்னையப்பநாடார் ஆ. அ. ஆறுமுகநாடார், பா. ம. பாண்டியநாடார், மா. வேலுநாடார், ந. யோவான்நாடார், வ. அ. ஏமநாடார், மு. சுடலைமுத்துநாடார், ப. ரா. முத்துச்சாமிநாடார், சிவ. அ. வாலசுப்பிரமணியநாடார், பெ. சு. பெரியசாமிநாடார், மா. வெ. பழனிச்சாமிநாடார் ஆகியவர்கள் மதுரை.

1. சங்கம் பிரசிடெண்ட் ஸ்ரீமான் வெ. பாலகுருசாமிநாடார் அவர்கள் ராஜிநாமாலெட்டர்கவுன்சிலில் ஆலோசிக்கப்பட்டு ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

2. காரியதரிசி ஸ்ரீமான் பா. ம. பாண்டியநாடார் அவர்கள் ராஜிநாமா லெட்டர் கவுன்சிலில் ஆலோசிக்கப்பட்டு டையாரை வாபீஸ் வாங்கிக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று. (டை யாரும் வேண்டுதலுக்கிணங்கி ராஜிநாமா லெட்டரை வாபீஸ் வாங்கிக்கொண்டார்கள்.)

3. சென்ற கவுன்சில் மீட்டிங்கில் நியமித்த ஆடிட்டர்கள் இது வரையும் கணக்கை ஆடிட் செய்து ரிப்போர்ட் அனுப்பாததால் அடியிற்கண்ட கனவான்களை ஆடிட்டர்களாக நியமிக்கலாயிற்று. ஸ்ரீமான்கள் மா. ச. மா பொன்னுச்சாமிநாடார் அவர்கள், கூ. மு. அ. ஆ. சண்முகநாடார் அவர்கள், வி. ஏ. ஏமநாடார் அவர்கள்.

4. கட்டடங்கள் வாங்குவதற்காக நியமித்த கமிட்டி மெம்பர்கள் இதுவரையும் எவ்வித ரிப்போர்ட்டும் அனுப்பாததால் அடியிற்கண்ட இரு கனவான்களை ஓர் கமிட்டியாக நியமித்து அவர்களுக்கு அவர்கள் சம்மதம்போல் சொத்துக்களைப் பார்த்து கிரயம் பேசி சங்கம் கவுன்சிலின் பிரதிநிதியாக பிரசிடெண்டு பேருக்கு தஸ்தாவேஜுகளை முடிவு செய்ய அதிகாரம் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று.

கமிட்டி.

ஸ்ரீமான் மா. வெ. பழனிச்சாமிநாடார் அவர்கள், ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்கள்.

5. கும்பகோணத்தில் நடைபெறப்போகும் 11-வது கான்பரன்ஸ் உபசாரணைக்கமிட்டியை அங்கீகாரம் செய்து அதிலடங்கிய மெம்பர்களை சங்கம் அங்கத்தினர்களாகும்படி கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கலாயிற்று.

6. 11-வது கான்பரன்ஸுக்கு 50 கனவான்களை ஸப்ஜெக்ட் கமிட்டியாகவும் இன்னும் கமிட்டியின் யுக்தானுசாரப்படி மெம்பர்களைச் சேர்த்துக் கொள்ளவும் அதிகாரம் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று.

7. ஸ்காலர்ஷிப் கமிட்டியாரின் ரிப்போர்ட்டை வாசித்து அடியிற்கண்ட மாணவ மாணவிகளுக்கு 1927-28-௵ ஸ்காலர்ஷிப் கொடுக்கத் தீர்மானிக்கலாயிற்று.

T. S. ஐயாத்துரை B. A. ஜூனியர் ரூ
144 U. ஈஸ்ரடாஸ் B. A. ஜூனியர் ரூ
144 A. நல்லையா B. A. ஜூனியர் ரூ
144 R. கந்தசாமி F. A. ஸீனியர் ரூ
108 E. சின்னப்பன் F.A. ஜூனியர் ரூ
108 N. முத்தையா F. A. ஜூனியர் ரூ
108 P. சுப்பிரமணியன் F.A. ஜூனியர்
ரூ 108, S. பாக்கியநாதன் V பாரம்
ரூ 48, A. முத்தையா IV பாரம் ரூ
48, D. அருமைநாயகம்மாள் VI வது
வகுப்பு ரூ 32 ஆக ரூ 992.

சங்கம் பிரசிடெண்டாக பொறையாறு ஸ்ரீமான் வெ. கனகசபைநாடார் அவர்களைத் தீர்மானிக்கலாயிற்று.

வந்தனோபசாரத்துடன் இரவு 9-மணிக்கு மீட்டிங் முடிவு பெற்றது.

மகாத்மா காந்தி தெரிசனம்.

5 தினங்களுக்கு முன் பேப்பரில் மகாத்மா சென்னை வருகிறார் என்று பார்த்தவுடனே 6—9—27ல் பரமக்குடியிலிருந்து புறப்பட்டு 7 வ. காலை 7 மணிக்கு எழும்பூர் ஸ்டேஷனில் இறங்கினவுடனே பச்சையப்பன் கலாசாலையில் காலை 8 மணிக்கு மகாத்மாவின் பிரசங்கம் கேட்கப்போனேன். ரெம்பத் திண்டாட்டத்தின் மேல் பிரசங்க மேடைடிக்கட் கிடைத்தது. மேலே ஹாலில் மகாத்மாவுக்குப் போட்டிருக்கும் ஆசனத்துக்கு அருகிலிருந்தேன். மகாத்மா வரும் வழியைக் கவனித்துக்கொண்டிருந்தேன். சரியாய்க் காலை எட்டு மணிக்கு இடுப்புக்குக் கீழும் முழங்காலுக்கு மேலுமாகக் கட்டின சிறு கதர் வஸ்திரத்துடனேயும், கழுத்தில் நூல் தொங்கவிட்டு வயிற்றிற்குச் சமீபமாகக் கிடக்கும்படியான சிறு கடிகாரமும், காலில் தோல் மிதியடியுமாக ஒருவர் முகத்தில் தேஜஸ் ஜொலிக்க புன்னகையுடனே வருவதைப் பார்த்தவுடனே, இதற்கு முன் படங்களில் பார்த்திருப்பதால் இவர்தான் மகாத்மா வென்று நினைத்து ஈஸ்வர தெரிசனம் கண்ட பக்தன் போல் நமஸ்காரம் செய்து கொண்டு நின்றேன். சபையில் சந்தோஷ ஆரவாரம் உண்டாயிற்று. மகாத்மா புன்னகையுடனே கதர் மெத்தையில் உட்கார்ந்தார். காலேஜ் மாணவர்களால் உபசாரப் பத்திரமும், பண முடிப்பும் மகாத்மாவுக்கு சமர்ப்பிக்கப்பட்டன. நான் மகாத்மாவின் ஆசனத்தருகில் உட்கார்ந்திருந்தேன். ஸி. ராஜகோபாலாச்சாரியாரும் மற்றப் பிரமுகர்களும் மேடையில் குழுமியிருந்தார்கள். பத்திரிகா நிரூபர்களும் விஷயங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு மணி நேரம் மகாத்மா மெல்லிய குரலில் மெதுவாகப் பிரசங்கம் செய்தார்கள். பிரசங்கம் செய்து முடிந்தவுடனே மகாத்மா புறப்பட்டார். நான் எழுந்து கதர் நிதிக்கு மகாத்மாவுக்கு ரூபாய் கொடுப்பதாக (மகாத்மாஜி ரூப்பிய தேயக்கா) என்று இந்துஸ்தானியில் மகாத்மா அவர்களே ரூபாய் கொடுக்கிறேன் என்று முன்னே நின்றேன். தேவ்பாய் என்று மகாத்மா சொன்னார். அதாவது, கொடு சகோதரா என்றார் மகாத்மா. பையிலிருந்து ரூபாய் 5 நோட்டாக மகாத்மாவின் கையில் கொடுத்ததும் பாதத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து பாதத்தை முத்தங் கொஞ்சினேன். மகாத்மா பாஸ் பாஸ் (போதும் போதும்) என்று சொல்லிக்கொண்டே நின்றார். உலகத்துக்கெல்லாம் சிரேஷ்டமான மகாத்மாவின் தெரிசனம் எப்போது கிடைக்குமென்று மனோராஜ்யம் செய்து கொண்டிருந்த எனக்கு, எனக்காக அப்பெரிய சபையில் 5 நிமிஷம் நின்று காக்ஷி கொடுத்த மகாத்மாவின் பெருமையையும், சர்வ ஏழைகளையும் தன்னைப்போல் நேசிக்கும் குணத்தையும் நான் நேரில் கண்டு ஆனந்திக்க நேர்ந்ததைப்பற்றி என்னுடைய ஜீவிய காலத்தில் அன்றைய தினத்தை ஒரு பெரும் பாக்கியமான நாளாகக் கருதி ஆனந்தமடைகிறேன்.

மூ. பே. பெரியஸாமி நாடார்,
பேரையூர்.

6-ம் பக்கத்தின் தொடர்ச்சி.

தொலைந்துவிட்டால் பிராமணன் பிடியிலிருந்து நம்மையும் சேர்த்து அடக்கிவரும் பிரிட்டானியம் தானே ஒழிந்துவிடும். அங்ஙன்வரும் சுயராஜ்ஜியமே நம்மை அடிமைத்தனத்திலிருந்து நீக்கிய சுயராஜ்ஜியமாகும். அந்த சுயராஜ்ஜியத்துக்காகவே நாம் பாடுபடவேண்டும்.

சுப்பிரமணியன்—நண்ப ஸ்ரீநிவாசா, நன்று சொன்னாய். உன்னுடைய உண்மையான தேசபக்தியும் ஆராய்ச்சித்திறனும் என்னுள்ளத்தைக் கவர்கின்றன. இன்று அதிகநேரமாயிற்று. பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைப்பற்றி நாளை காந்தி சவுக்கத்திலேயே ஒரு பொதுக்கூட்டம் நடத்துவோம். உங்கள் சம்மதமென்ன?

சிவசங்கரன்—சம்மதம் கேட்பானேன்? நாளை கட்டாயம் கூட்டத்தை நடத்துவோம். போய் வருகிறோம். —போகிறார்கள்.

சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாம
ஏது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்துரு வெளியை மனவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளை
நினைவாகச் சிந்தை செய்வாம்.

நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ ஆவணி மீ ௨௰௭ ௳

கதர்நிதியும்,
காந்தியடிகளும்.

மஹாத்மா காந்தியடிகள் கதர்த் தொழிலை தேசமெங்கும் பரப்புவதற்காக கதர்நிதி என்று ஒன்றை யேற்படுத்தி அதற்காக நாடெங்கும் பிரயாணம் செய்து தற்போது தமிழ்நாட்டுக்குவிஜயஞ்செய்திருக்கிறார்கள். தேசபக்தியையும சுயமரியாதையையும் விரும்பும் ஒவ்வொருவரும் கட்டாயம் கதருடுத்த வேண்டியதுடன், கதர் நிதிக்கும் தங்களாலியன்ற பொருளுதவிசெய்யவேண்டுவதும் அவசியமேயாகும். நாடார் மஹாஜனங்களும் கதர் விஷயத்தில் எவ்வித அபிப்பிராய பேதமுமில்லாமல், ஒத்தாசை செய்யவேண்டியது கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாடார் மகாஜனங்களிடத்தில் கதர் பக்தியும் அபிமானமும் நிரம்ப இருக்கிறதாயினும், ஒரு சிலர் கதரில் ராஜீயவாசனை யிருக்கிறதென்றும் அதை ஒரு ராஜீயக்கட்சியார் தங்கள் குறியாகக் கொண்டிருக்கிறார்களென்றும் கருதி இதுவரை கதருக்கு யாதொரு உதவியுஞ் செய்யாதிருந்து வந்தார்கள். இப்போது சகல ராஜீயவாதிகளும் கதரியக்கம் பொருளாதாரத்தையும் சுயமதிப்பையும் உண்டாக்கும் பெரிய சாதனமென்பதையுணர்ந்து ஆதரித்து வருகிறார்களாதலால் நாடார்களும் தாங்கள் எந்த ராஜீயக்கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் கதரியக்கத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

நிற்க, கதர் நிதிக்குப் பொருள் திரட்டுவதற்காகவே மஹாத்மா சுற்றுப்பிரயாணஞ் செய்கிறாராதலால் எங்கெங்கு பொருள் வருவாய் அதிகமாய்க் கிடைக்குமோ அங்கங்குதான்மஹாத்மா வரமுடியுமென்றும், பொருள் வருவாயில்லாத இடங்களுக்கு வரமுடியாதென்றும் திரு. ச. இராஜகோபால் ஆச்சாரியார் முதலான தென்னாட்டுத் தலைவர்கள் பத்திரிகை மூலம் விளம்பரஞ் செய்திருக்கிறார்கள். இவ்விதக் கட்டுப்பாட்டினை நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. பொருளில்லாமல் கதர்த் தொழிலை விருத்திசெய்ய முடியாதென்பதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் ஜனங்களுக்குள் கதர் அபிமானமில்லாவிட்டால் கதர் விற்பனை செய்யமுடியாமல் தொழிலே படுத்துவிடுமென்பதையுங் கவனிக்கவேண்டும். மகாத்மாவின் சுற்றுப்பிரயாணப் பட்டியானது மணிக்கு முந்நூறுமைல் வேகத்தில் செல்லும் ஆகாய விமான யாத்திரைபோல் தயார் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு அவசரப்படுவானேன்? மகாத்மாவின் தேக நிலையை ஒரு காரணமாய்ச் சொல்லலாம். மஹாத்மா நம் நாட்டில் பிறந்தவர்; நம் நாட்டிலேயே இருக்கிறார். குஜராத்தில் பிறந்தாராயினும், இந்திய தேசத்தின் ஒவ்வொரு பாகமும் அவர் உள்ளத்தில் இடம்பெறத் தகுந்தது. கதரியக்கத்திற்கே தமது உடல், பொருள், ஆவியைத் தத்தஞ்செய்து விட்டாராதலால் ஆற அமர ஒவ்வோரிடத்திலும் தங்கி, எல்லா ஜனங்களிடத்திலும் அவரது கொள்கையை நிலைபெறும்படி செய்யவேண்டியது அவசியமில்லையா? அவ்விதம் சாவதானமாய்ப்பிரயாணஞ் செய்தால் அடிகளின் உடல் நலத்துக்கும் யாதொரு கெடுதியும் வராது. தற்கால வேலைத்திட்டமானது ஒரே நாளில் பல விடங்களில் பேசும்படி நிர்ப்பந்திப்பதாலேயே அடிகளும் வருந்தும்படி நேரிடுகிறது. இப்போதுள்ள திட்டப்படி பார்த்தால் சில பெரியவூர்களில் பல வக்கீல்களும் மாணவர்களும் பெருங் கூட்டமாய்க் கூடி கைதட்டி ஜயகோசஞ் செய்ய முடியுமேதவிர வேறு யாதொரு பிரயோசனத்தையும் தரப்போவதில்லை யென்பதை சர்க்கா சங்கத்தாரும் தலைவர்களும் கவனிக்கவேண்டும்.

உண்மையான ராட்டை இயக்கம் கிராமங்களில் வலுப்பெற்றாலல்லாமல் வெகு சீக்கிரத்தில் அழிந்துபோகும். ஏனெனில் ஒரு நாள் முழுதும் ராட்டினஞ் சுற்றினால் ஒரு அணா முதல் மூன்றணாவரை திறமைக்குத் தக்கபடி சம்பாதிக்கமுடியும். இந்த வருமானம் கிராமஜனங்களுக்கு எவ்வளவோ பெரிய உதவியாயிருக்கும். நகரங்களிலோ வீடுகட்டுதல் முதலான தொழில்களுக்கும் விவசாய வேலைகளுக்கும் குறைந்தது நாலணாமுதல் ஆறணாவரையும் கூலிகிடைத்துவருகிறது. இவைகளில் பெண்களும் ஆண்பிள்ளைகளும் சாதாரணமாய் ஜீவனஞ் செய்துவருகிறார்கள். இந்த வருமானமே அவர்களுக்கு போதுமானதாயில்லாமலிருக்கும் பொழுது குறைந்த வருமானமுள்ள ராட்டினத் தொழிலைச் செய்ய எவ்விதம முன்வருவார்கள்? ஒருவேளை அபிமானத்தால் முன்வந்தாலுங்கூட வெகு சீக்கிரத்தில் விட்டுவிடுவார்களென்பது மனித சுபாவத்துக்கு ஒத்ததில்லை யென்று சொல்லமுடியாது. ஆகையால் கதரியக்கம் பலப்பட்டு தேசம் முன்னேற்றமடைய வேண்டுமானால் மகாத்மாவின் சுற்றுப் பிரயாணமானது பணங் கொடுக்க முடியாததும், விவசாயத்தை மாத்திரம் நம்பியிருப்பதுமான கிராமங்களிலேயேவிசேஷமாய்நடக்கவேண்டியதாயிருக்கும். மகாத்மாவும் இவ்விதக் கொள்கையையே பல இடங்களிலும் வற்புறுத்தி வந்திருக்கிறாராயினும் பிரயாணத்தைத் திட்டப்படுத்தும் தலைவர்கள் நுனிப்புல் மேய்வதிலேயே கவலையாயிருக்கிறார்கள். பணம் எவ்வளவு அவசியமோ அதைப்பார்க்கிலும் காரியசித்தி பலமடங்கு அவசியம். தென்னாட்டில் ராட்டினஞ் சுற்றுதல் நின்று சுமார் 25 அல்லது முப்பது வருஷங்களே ஆகியிருப்பதால் மஹாத்மாவின் கிராமாந்திர விஜயம் கதரியக்கத்தை வெகு சீக்கிரத்தில்முன்னுக்குக் கொண்டு வந்துவிடும்.

கிராமாந்திரப்பிரயாணம் மிகவும் கஷ்டமானதென்பதையும் மகாத்மாபோன்ற உடல் நிலையுள்ளவர்கள் அவ்வித கஷ்டத்தை ஏற்று நடத்தமுடியாதென்பதையும் ஒரு சாக்காகச் சொல்லக் கூடும். கிராமங்களைச் சந்திக்கும்படியான போக்குவரத்து வசதியுள்ள இடங்களுக்காவது மஹாத்மா ஒரு தடவை பிரயாணஞ் செய்வாரானால் சர்க்காசங்கத்தார் ஆயிரம் பிரசாரகர்களைவைத்து நடத்தும்பிரயோசனத்துக்கு மேலானபிரயோசனம் நிச்சயமாய் உண்டாகுமென்றுநாம்நம்புகிறோம். இதைஒரு ஜில்லாவிலாவது பரீட்சை நடத்திப் பார்ப்பார்களானால் தென்னாட்டுத் தலைவர்களுக்கு மனந்திரும்பிவிடும்.

நகரங்களில் செய்யும் சுற்றுப் பிரயாணமும் உயர் வகுப்பாரென்றும் நடுத்தரவகுப்பாரென்றும் சொல்லிக்கொண்டு அந்நிய ஆட்சிக்கு ஆதாரமாயிருக்கும் இந்தியரை உண்மை நிலையை அறியும்படி செய்து தேச முன்னேற்றத்துக்கு ஒத்தாசை புரியத்தூண்டுதல் செய்யுமென்பதை நாம ஒப்புகொள்ளுகிறோம். மேற் சொல்லிய வகுப்பார்களின் டம்பாச்சாரித்தனத்தாலேயே அந்நியநாடுகளிலிருந்து உடைகளும இதர சாமான்களும் பெருவாரியாக இறக்குமதியாகி நமது தேசத்துத் தொழில்களை அழித்துவிட்டதென்பதையும் அந்நிய நாட்டுச் சாமான்கள் எவ்வளவு சாஸ்தியாய் இறக்குமதியாகிறதோ அவ்வளவு தூரம் அந்நிய ஆதிக்கம் உரம்பெற்று வளர்ந்து வந்திருக்கிறதென்பதையும் நாம் மறைக்க முயலவில்லை. ஆயினும் நாம் சொல்லுவதெல்லாம் நகரங்களில் மகாத்மா பிரயாணஞ்செய்வதும் பணவசூல் செய்வதும் எவ்வளவு அவசியமோ, அதைப்பார்க்கிலும் அவசியம் கிராமப் பிரயாணமென்பதை வற்புறுத்துவதேயாம்.

மகாத்மா கதர்நிதி திரட்டுதலைப் பற்றி இன்னொரு அபிப்பிராயமும் ஜனங்களுக்குள் உண்டாகியிருக்கிறது. ஒத்துழையாமை ஆரம்பித்தகாலத்தில், திலகர் சுயராஜ்ஜிய நிதிக்கு ஒரு கோடி ரூபாய்க்குமேல் சேர்ந்தபோது தென்னாட்டுத் தலைவர்களாக இப்போதிருப்பவர்களதானே முன்பும் இருந்து நிர்வாகம் நடத்தினார்கள்; அந்நிதி போனபோக்கே தெரியவில்லையே; அந்நிதியிலிருந்து சென்னை 'சுயராஜ்ஜியா' பத்திரிகையை நடத்தும் கம்பெனிக்குக் கடனாகக் கொடுத்த பத்தாயிரம் ரூபாய் வசூலாகாமல் கிடப்பதும் அது இப்போது கவர்ன்மெண்டின் பக்கபலமாயிருந்து ஒத்துழையாமையை ஒடுக்கிவரும் சுயராஜ்ஜியக் கட்சியை வளர்ப்பதற்கு உபயோகப் படுவதும் மூலக்கொள்கைக்கு நேர்விரோதமல்லவா? கதர்நிதியும் இவ்விதமான நிலைமைக்கு வந்துவிடாதென்பதற்கு என்ன அத்தாக்ஷி யிருக்கிறது என்பதேயாம். இவ்வித கேள்விகள் உண்டாவது சகஜமே. மகாத்மா இப்போது தெரிவிக்கும் அபிப்பிராயப்படி தினம் ஒரு வேளை கஞ்சிக்கும் வழியில்லாத ஏழைகளுக்கே கதர் நிதிபோய்ச் சேருவது நிச்சயமானால் சர்க்கா சங்கத்தில் ஊழியஞ் செய்வோராக இப்போதுள்ள சம்பளச் சிப்பந்திகளில் பிராமண சமுகத்தாரே விசேஷமாயிருப்பதாகத் தெரிவதாலும் அவ்வகுப்பார் சாதாரண சனங்களை தங்கள் சத்துருக்களைப்போல நினைத்து கிட்ட நெருங்கவும் கூசுபவர்களாதலாலும் அவர்கள் ராட்டினஞ் சுற்றுவதை அவர்களின் குருவாகிய சங்கராச்சாரியார் ஆக்ஷேபித்திருப்பதாலும் அத்தகையார்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு எந்தப் பாகத்தில் எந்த வகுப்பார் ஏழைகளாகவும் ராட்டினத் தொழிலையே யேற்று நடத்துபவர்களாகவும் இருக்கிறார்களோ அந்தப்பாகத்தில் அவ்வகுப்பார்களிலேயே கதரபிமான முள்ளவர்களை வேலைக்கமர்த்தி இராட்டை இயக்கத்தை முன்னுக்குக் கொண்டுவரும்படி மகாத்மாவை வேண்டுகிறோம்.

மேற்கண்ட விஷயங்களை மகாத்மா கவனியாமலும் அதுவிஷயமாய் அவருடைய அபிப்பிராயத்தைப் பகிரங்கமாக வெளியிடாமலுமிருந்துவிடுவாரானால் மகாத்மாவின் கதர்நிதி சுற்றுப்பிரயாணமானது ஒரு பெரிய சங்கராச்சாரியின் சுற்றுப்பிரயாணமாய் முடிந்துவிடுமோ வென்று அஞ்சுகிறோம்.

உழைப்புள்ள
கௌன்சிலர்களே தேவை.

அபிமானிகளே !

1910ம் வருடத்தில் ஸ்தாபிக்கப்பெற்ற நமது சங்கமானது இதுவரை நம் சமுகத்திற்கு எவ்வித பூர்ணமான நன்மையும் செய்ததாக இல்லை. காரணம் அதன் நிர்வாகிகளுடையவும் நிர்வாக சபையினுடையவும் பரிபூரண உழைப்பின்மையே. இனியும் இந்நிலைமையில் நாம வாளாவிருப்போமாகில் நமது சங்கத்தின் பிரகாசம் ஒழிக்கப்பட்டுப்போய் விடுமென்பதில் சந்தேகமில்லை. ஆனதால் நிர்வாகசபை (கௌன்ஸில்) யில் உண்மை அபிமான முள்ளோர் பலர் அங்கத்தினர்களாய் அமர வேண்டுவது அத்தியாவசியமாக விருக்கிறது. இது நேரத்தில் அக்டோபர் மீ 2௳ 3௳ களில் கும்பகோணத்தில் நடைபெறவிருக்கும் ஜெனரல் மீட்டிங்கில் சாதாரண அங்கத்தினர்களிலிருந்து 40 அங்கத்தினர்கள் நிர்வாகசபை அங்கத்தினர்களாகத்தெரிந்தெடுக்கப்பெறுவார்கள். ஆதலால் நிர்வாகசபை அங்கத்தினர்களாகப் பிரியமுள்ள உண்மை அபிமானிகள்உடனேஇவ்வருட (1927-28) அங்கத்தினர்களாகி தங்களைக் கௌன்ஸில்மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கும்படி செப்டம்பர் மீ 26௳க்குள் காரியதரிசிகளுக்கு விண்ணப்பங்கள் அனுப்புவதோடு அது விபரங்களை எமக்கும் தெரிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். சாதாரண அங்கத்தினர் சந்தா வருடமொன்றுக்கு ரூபாய் 1—0—0. ஏற்ற சமயத்தை இழந்து விடாதீர்கள்.

காரியதரிசிகள்,

நாடார் ஊழியப் பிரசுரசபை,

221. கீழ மாரட்டு வீதி, மதுரை.

திருச்செந்தூர் திருவிழா.

தமிழ்நாட்டில் திருச்செந்தூர் என்பது புராதனமான விசேஷமுள்ள ஒரு சிவஸ்தலமாகும். புராணங்களினால் புகழப்பட்டிருக்கும் இச்செந்திமாநகரில் கோயில் கொண்டிருப்பது குமரக்கடவுளாகும். குமாரக்கடவுளது கோவிலுக்கு வேண்டிய திருப்பணிகளையும் ஏராளமான மானியங்களையும் விட்டுக்கொடுத்திருப்பது காயாமொழி ஆதித்த நாடார்கள் என்பது ஜகப் பிரசித்தம். என்ற போதிலும் கர்த்தாக்கள் காலமுதலாக ஆதித்த நாடார்கள் தங்களது உரிமையை இழந்தே வந்தனர்.

ஆவணி, மாசி மாதங்களில் நடக்கும் தேர் திருவிழாவில் ஆதித்தநாடார்கள் தேர்வடத்தைத் தொட்டுக் கொடுத்து, விடலை எறிந்து, திருக்கண் சாத்திய பிறகே இதர வகுப்பினர் தேரைத் தொட்டு இழுப்பது வழக்கம் என்ற தொன்மை சுமார் ஐந்து வருஷத்திக்கு முன் வரை ஒழுங்காக நடந்து வந்தது. ஆனால் ஸ்ரீமான் சோணாசலம்பிள்ளை அக்காலத்தில் தர்மகர்த்தாவாக அமர்ந்திருந்தபடியால் அவர் காலத்தில் அந்த உரிமையும் பறிமுதல் செய்யப்பட்டது. ஆகவே சுமார் ஐந்து வருஷங்களாக தேர் தொட்டுக் கொடுக்கும் வழக்கமும் நின்று போயது.

ஆனால் நாடெல்லாம் விழித்துக் கொண்டது. எங்கும் சமத்துவம் சுதந்திரம் என்ற தொனிகள் முழங்குகின்றன. உத்தம காலமாகிய பிரபவ வருடமும் பிறந்தது. 1103ம் ஆண்டு ஆவணி முதல் நிகழ்ந்தது. ஆரம்ப நாளையிலேயே நல்லறி குறியாக திருவிழாவும் ஆரம்பித்துவிட்டது. பத்தாவது தெய்தியில் பத்தாவது திருவிழா. இன்றுதான் தேர்விழா. தற்காலமிருக்கும் தர்மகர்த்தாக்கள் உலகானுபவமுள்ளவர்கள். ஒவ்வொரு சமூகமும் இழந்துபோன உரிமையைப் பெறவேண்டுமென்ற பேராவலுடையவர்கள். அவர்கள் தங்கள் எண்ணத்தை வெளியேற்றிக் கொள்கையைவற்புறுத்தினர். பிராமணர்களும் சம்மதித்தனர். ஆகையால் ஆதித்தநாடார்களிடம் வந்து உரிமையைப் பெற்றுக் கொள்ளும்படியாக வேண்டினர். நல்லகாலம் அவர்களும் ஏற்றுக்கொண்டனர். ஆகவே வழக்கப்பிரகாரம் தேருக்குரிய கிரியைகள் நடைபெற்றதும் ஆதித்தநாடார்கள் இந்தப் புதிய வருடத்தில் தங்கள் உரிமையைப் பெற்று தேர் வடத்தைத் தொட்டுக் கொடுத்து தேங்காய் உடைத்து திருக்கண் சாத்தி பிரசாதம் பெற்று வீடு திரும்பியிருக்கின்றனர்.

இத்தகைய சந்தோஷமான செய்தியைக் கேட்டதும் நான் அடையும் சந்தோஷத்துக்கு அளவில்லை. இதற்குக் காரணர்களாகிய தர்மகர்த்தாக்கள் புகழ் என்ஞான்றும் நிலவுலகில் நிலவுமென்பதிலையமில்லை. அவர்களைப் புகழ்கிறோம்.

ஆனால் இன்னொரு விஷயம். இதே விதமாக குமரக்கடவுள் கோவிலில் ஆதித்தநாடார்கள் இழந்துபோன ஒவ்வொரு உரிமைக்கும் விமோசன காலம் நெருங்கிவிட்டதென்றே நம்பலாம். தண்ணீர்ப்பந்தல் விஷயம் சமாதானமாக முடிந்தபோதிலும் ஆயிரக்கால் மண்டபப்படியை நீங்கள் கோயில் பெயரைச் சொல்லி எங்களை விட்டு அடியோடு எடுத்துக்கொண்டதை நினைக்குந்தோறும் ஆயிரங்கால் மண்டபப் படியை நாங்கள் பார்க்குந்தோறும் எங்கள் மனம் வாதனை யுறுகிறது. நாங்கள் என்ன செய்வோம்! எல்லாப் பாரத்தையும் முருகன் மீதே போட்டுவிட்டோம். எல்லாம் அவன் செயல். எங்களுடைய உரிமைகளெல்லாம் மீட்கப்படவேண்டிய காலம் இதுதான். வேறு தர்மகர்த்தாக்களை நாங்கள் நம்புவதற்கில்லை. இப்பொழுதிருக்கும் தர்மகர்த்தாக்களையே நாங்கள் பெரிதும் நம்பியிருக்கிறோம். இதே விதமாக எங்களுடைய உரிமைகளனைத்துக்கும் வழி திறக்க வேண்டிக்கொள்கின்றோம்.

சகல கக்ஷியும் பிராமணர்களை தூஷிக்கும் இந்தக் காலத்தில திருச்செந்தூர் பிராமணர்களைப் புகழும்படியாக

கடிதங்கள்.

நாடார் மஹாஜன சங்கம் கனம் காரியதரிசிகளுக்கு.

11-வது கான்பரன்ஸுக்கு தீர்மானம் கொண்டுவர விருப்பமுள்ளவர்கள் உங்களுக்கு 15—9—27க்குள் தீர்மான ரூபமாக எழுதியனுப்ப வேண்டுமென்று பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கும் அறிக்கையைப் பார்த்தேன். இவ்விதம் அறிக்கை வெளியிட சங்க சட்டத்தின் எந்த விதி இடங்கொடுக்கிறது? 102-வது விதி "சங்கத்தின் அங்கத்தினர்களாவது டெலிகேட்டுகளாவதுவேனும் விஷயங்களை கான்பரன்சில் ஆலோசனைக்குக் கொண்டுவர விரும்பின் அவ்விஷயங்களை ஸப்ஜெக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டும். அக்கமிட்டி அவ்விஷயங்களை யுக்தானுசாரப்படி அங்கீகரிக்கவாவது, தள்ளிவிடவாவது செய்யலாம்" என்றல்லவோ கூறுகிறது. இன்ன தெய்திக்குள் அனுப்ப வேண்டுமென்றாவது காரியதரிசிகள் மாறலாய் அனுப்ப வேண்டுமென்றாவது எந்த இடத்திலும் சொல்லவில்லையே. ஸப்ஜெக்ட் கமிட்டி நடந்து கொண்டிருக்கும்பொழுது கூட விஷயங்களை எழுதிக்கொடுக்க அங்கத்தினர்களுக்கும், டெலிகேட்டுகளுக்கும் சட்டம் அதிகாரமன்றோ கொடுக்கின்றது. விஷயம் இப்படியிருக்க, உங்களுக்கு அதிகாரமில்லாத விஷயத்தில் நீங்கள் எதேச்சாதிகாரம் செலுத்த முற்பட்டதின் நோக்கந்தானென்ன? இவ்விஷயங்களுக்கு பகிரங்கமாக பத்திரிகைகளில் பதிலளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் செய்த காரியம் சட்டத்தின் மேல் உங்களுக்குள்ள அலட்சியத்தையே எடுத்துக் காட்டுகிறது. இனியாவது சங்கத் தீர்மானங்களுக்கும், சட்டத்திற்கும் பெருமையைத் தந்தருளுமாறு தெரிவித்துக்கொள்கிறேன்.

ப. வ. சோமசுந்தர நாடார்.

கதர் மணம்,

அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் காரியதரிசியும், மகாத்மா காந்தி கைராட்டினச் சங்கக் காரியதரிசியும், பொது நலப் பிரியரும், எனது பிரிய நண்பருமான திருவாளர் அ. பெ. இரத்தினவேல் நாடார் அவர்கள் தமது திருமண வைபவத்திற்கு, இதுவரை ஆதரித்து வந்ததேபோல் கதரைப் பூராவும் ஆதரித்தது போற்றத்தக்கது. அன்பர் அவர்களின் வழியைப் பின்பற்றி இந்நகர் வாழ்தேசாபிமானப் பெரியோர்களும், மற்றும் ஏனையோரும் கதரை ஒரு காரியத்திற்கென்றும், ஒரு காலத்திற்கே யென்றும் கருதாது சதாவும் அபிமானித்து வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவசுப்பிரமணியன்.

அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய காலம் இதுவே. நாடார் வகுப்பினர் பூராவும் மற்ற வகுப்பினருக்கு எந்த விஷயத்திலும் பின்னிடாதவர்களாக இருப்பதை நாடறியும். நாமெல்லாம் ஒரே சகோதரர்கள். குமரனின் குழந்தைகள். ஒன்றாய் நின்று அவனை வழிபடுவோம். ஒருவர்க்கொருவர் பரஸ்பரம் கொள்வோமாக.

அ. ப. ஆதித்தன்,
கொளும்பு.

நாடார் மஹாஜனங்களுக்கோர் வேண்டுகோள்.

மதுரை நாடார் மஹாஜன சங்கத்தின் காரியதரிசிகளின் ஸ்தானங்கள் கும்பகோணத்தில் நடக்கும் 11-வது மகாநாட்டில் 3—10—27-ல் காலியாகப்போவதால் ஷை ஸ்தானங்களில் ஒன்றுக்கு தொழிலாளர்களின் பிரதிநிதியாக நான் அபேக்ஷகராக நிற்கப் போவதால் நாடார் குலாபிமானிகள் அனைவரும் தயவு செய்து என்னை ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தங்களன்புள்ள ஊழியன்,
வ. தி. சங்கரலிங்க நாடார்,
மதுரை.

பாலமேடு.

ஆவணி௴ 2௳ பகல் சுமார் 5 மணிக்கு விருதுநகரிலிருந்து மதுரையில் வந்திருக்கும் நாடார் உறவின் முறை முக்கிய கனவான்கள் இங்கு விஜயஞ் செய்தனர். இரவு 7 மணிக்கு ஸ்ரீபத்ரகாளியம்மன் கோவில் பேட்டையில் அமைத்திருக்கும் சிங்காரக் கொட்டகையில் மகா-௱-௱-ஸ்ரீ சிவ. பெ. நா. சி. தங்கமணி நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் கூட்டம் நடைபெற்று முறைகாரர்கள் மூன்று பேர் வழக்கையும், உறவின்முறையார் சொன்ன வழக்கையும் கேட்டுக் கொண்டு மதுரை உறவின்முறையார் தாங்கள் சொல்வதை கேட்கவேண்டுமென்று பாலமேடு உறவின்முறையாரிடத்தில் வாக்குறுதி பெற்றுக் கொண்டார்கள்.

3௳ பகல் 9 மணிக்கு சிவ. பெ. நா. சி. தங்கமணி நாடாரும் மற்றும் மதுரை உறவின்முறையாரும் கூடி தீர்மானித்த வியூகம் வாசிக்கப்பட்டு ஷை தீர்மானத்தை சகலரும் ஆதரித்து ஒற்றுமை ஏற்படுத்தி வைத்த பிரமுகர்களுக்கு வாழ்த்துதல் கூறப்பட்டது என்று பாலமேடு நாடார் சங்கம் அதிகாரிகள் எழுதுகிறார்கள்.

இளைஞர் மகாநாடு.

தற்சமயம் நாடார் உலகமிருந்துவரும் நிலைமையில் நாடார்மகாஜன சங்கத்தின் நோக்கத்தை நிறைவேற்றிவைப்பதை முன்னிட்டு நாடார் இளைஞர் மகாநாடு ஒன்று கூட வேண்டுவது மிகவும் அத்தியாவசியமாகஇருக்கிறது. நாடார் உலகின் முன்னேற்றம் இவ்விளைஞர் மகாநாட்டை எதிர்நோக்கிநிற்கிறது. ஆனதால் 1927-ளு அக்டோபர்மீ 1௳ யன்று கும்பகோணத்தில் நாடார் இளைஞர் மகாநாட்டைநடத்திவைக்க வாலிபர்கள் முன்வருமாறு வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறோம் நாடார் மகாஜன சங்கத்தின் தீர்மானங்களை நிறைவேற்றி வைப்பதற்குரிய முறையில் வேலை செய்வதற்காக நாடார் வாலிபர் மகாநாடு அத்தியாவசியமென நாம் பன்முறை அறிக்கைகள் வாயிலாகவும் சொல்லிவந்திருக்கிறோம். இவ்விளைஞர் மகாநாட்டை நடத்த நம்மால் கூடியவரை ஒத்தாசை புரியவும் முன்னின்று வேலை செய்யவும் தயாராயிருக்கிறோம். ஆகையால் வாலிப அன்பர்கள் தங்கள்தங்கள் நோக்கங்களை பத்திரிகை மூலமாவது கடிதங்கள் மூலமாவது அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

காரியதரிசிகள்,
நாடார் ஊழியப்பிரசுரசபை.
221. கீழமாரட்டு வீதி, மதுரை.

நாட்டு நடப்பு.

இந்தியா கவர்ன்மெண்டு நிபுணரான டப்ளியூ. ரெயிட்லீட்ஸ் என்பவர் நாட்டின் பத்திரிகைகள் வர வர அதிகரித்துவண்ணமாயும் காகிதம் செய்ய உபயோகமாகும் மரங்கள் குறைந்து கொண்டும் வருவதால் இன்னும் 20 வருஷத்திற்குள் காகிதப் பஞ்சம் ஏற்படலாமெனக் கூறுகிறார்.

ஸ்ரீரெங்கம் கோயில் கைங்கர்ய லாட்டரியில் 50000 ரூபாய் பிரைஸ் கொடுப்பதாயிருந்ததை முடிவில் 30000 ரூபாய் கொடுப்பதாக ஒதுக்கி வைக்கப்பட்டது. முதல் பிரைஸ் ரூ 3000 நாமக்கல் பி. எம். ஆர். பாலரத்தினம்மாளுக்கும் 2-வது பிரைஸ் ரூ 1500 பீளமேடு ஸ்ரீமதி ரங்கயகி அம்மாளுக்கும் 3-வது பிரைஸ் ரூ 1200 [illegible]கோட்டை காளியப்ப செட்டியருக்கும் உதயமாகி யிருக்கின்றனவாம்.

கோயமுத்தூரில் ஏற்பட்ட ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம் அதிக நாள் நீடித்து வியாழக்கிழமை முதல் இரண்டொரு ஆலைகளுக்கு தொழிலாளர் வேலைக்குத் திரும்பியிருக்கின்றனர். முடிவு விபரம் திடமாய் சொல்வதற்கின்றி தலைவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் ஆலை முதலாளிகளுக்கும் நேர்வழி இன்னும் திறக்கப்படவில்லை.

9—9—27-ல் ஸிம்லாவில் இந்து முஸ்லீம் ஒற்றுமை மகாநாடு கூடியிருக்கிறது. மாகாணவாரியாக கமிட்டி தேர்ந்தெடுத்து விஷயங்களை ஆலோசிக்க ஏற்பாடாகியிருக்கிறது. இதில் சென்னை மாகாணத்துக்கு ஸ்ரீமான்களான, ஸ்ரீநிவாசய்யங்கார், டி. பிரகாசம், ஸர். சங்கரன்நாயர், ஸர். பி. எஸ். சிவசாமிஐயர் ஆகியவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

நாகபுரியில் நடந்த ஹிந்து முஸ்லீம் கலகத்தில் 13 முஸ்லீம்களும் 12 ஹிந்துக்களும் கொல்லப்பட்டனர்.

9—9—27-ல் கார்வால் ஜில்லாவில் வருணபகவனின் அதிகத்தால வெள்ளமேற்பட்டது. தானிய மார்க்கட்டில் 5 லக்ஷரூபாய்க்கு சேதம். விவசாயிகளே பெரிதும் கஷ்டமடைந்திருக்கின்றனர்.

கான்பரன்ஸ் கவனம்.

கான்பரன்ஸிற்கு ஏராளமான பிரதிநிதிகள் விஜயஞ்செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்களும் காரியதரிசிகளும் டிக்கட் விற்பனை செய்வதற்காக 4-9-27-ல் மோட்டார் வாகனத்தில் புறப்படுவதாகப் பத்திரிகையில் கண்ணுற்றேன். ஆனால் அதன்படி புறப்பட்டதாகத் தெரியவில்லை. முன்னர் சங்கம் லாட்டரிச் சீட்டு நடைபெறும் போதும் கனம் சௌந்தரபாண்டியநாடார் அவர்களின் சுற்றுப்பிரயாணத்தைக்குறித்து பத்திரிகைகளில் பறைசாற்றுதல் பலமாக இருந்தது. ஆனால் முடிவு வரை எவ்வித வேலையும் செய்யாமல் ஒதுங்கி விட்டார். அவரது ஒத்தாசையை நாடி பலர் ஏமாற்றமடைந்தனர். சில மாதங்களுக்கு முன்னால் தமக்கு சட்டசபையில் ஸ்தானங்கிடைத்ததுடன் மூன்று வருடமும் ஜனசமூக முன்னேற்றத்தைக் கருதி பல இடங்களுக்கு சுற்றுப்பிரயாணம் செய்யப் போவதாகப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தினர். அவ்விளம்பர விஷயம் தற்பொழுது எங்கு நடைபெறுகிறதென்பது நமக்குத் தெரியவில்லை. முந்திய பிரஸ்தாபத்தைப்போன்று இப்பிரஸ்தாபமும் எங்கு வீணாகப் போய்விடுமோவென்று விசனப்படுகிறோம். என்றாலும் 11-வது மகாநாட்டிற்கு தனது ஆப்த நண்பர் ஒருவர் அக்கிராசனம் வகிப்பதால் அவரை முன்னிட்டாவது இவ்வேலையில் தீவிரமாக உழைப்பாரென்று ஆறுதலடைகிறோம். "பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை" என்ற நாட்டுப் பழமொழி இவ்விஷயத்தில் பலிதமடையாதிருக்க ஆண்டவன் அருள் புரிவாராகவும்.

ப. வ. சோமசுந்தரநாடார்.

ஸ்ரீநிவாசன்.

ஓர் சிறு நாடகம்.

A. C. பாண்டியர் எழுதியது.

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

இடம்—ஸ்ரீநிவாசன் வீடு.

காலம்—பகல் 2½ மணி.

ஸ்ரீநிவாசன்—நண்ப சிவசங்கரா! இன்று நடந்த துக்ககரமான சம்பவம் என் நெஞ்சைப்பிளக்கிறது. தொண்டர் தலைவர் துரைசாமி அய்யங்காரின் தகப்பனார் மணவாள அய்யங்கார் பேசிய பேச்சுகளும் அவர் என்னை எறிந்த இரும்புக்குழவியால் நான் வெகுண்டு அவலை எறிய, அது துரைசாமி அய்யங்கார் பல்லை உடைத்ததும் நாம் எதிர்பாராத காரியங்களன்றோ?. நான் ஒரு தொண்டனாயிருந்தும் எனக்கேன் இத்தனை கோபம் வந்தது! இதிலிருந்து ஒரு புழுவுங்கூட தன்னை மிதிப்பவனை திரும்பக் கடிக்கப் பிரயாசைப்படும் என்று எனது உபாத்தியாயர் சொல்லிய வாசகம் உண்மையாக வன்றோ முடிந்தது.

சிவசங்கரன்—நாம் தொண்டராக அமர்ந்ததால், வேணுமென்று அக்கிரமமாய் நடத்தும் பார்ப்பனர்களுக்குக் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லை. நீ செய்தது சரியென்பதே எனது அபிப்பிராயம். சுப்பிரமணியனும் இத்தனை அவமானங்களுமடைந்து தான் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்திருப்பானென்பது இப்போது உறுதியாயிற்று. நாம் இன்னொரு விஷயத்தையும் சோதித்துவிடவேண்டும். 3-மணிக்கு சிலோன் போட்மெயில் வந்துவிடும். உடனே புறப்படு. நண்பர் குழந்தையும், சத்தியமூர்த்தியுடன் வருவதாய்ச் சொன்ன வார்த்தையையும் சோதித்துவிடவேண்டும்.

ஸ்ரீநிவாசன்—வாஸ்தவந்தான்; உடனே புறப்படுவோம்; வாருங்கள்.

வாசகர்களுக்கு ஸ்ரீநிவாசன் யாரென்பதையும் சிவசங்கரன் யாரென்பதையும் விளக்கக்கூறி மேற்செல்வோம்.

நமது இந்தியநாட்டின் துரதிஷ்டவசத்தால் பார்ப்பன ஆதிக்கம் மேம்பட்டு அவர்களால் யேற்படுத்தப்பட்ட வருணாசிரம தர்மப் பிசாசால் ஒதுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டவர்களும், பூர்வ குடிகளுமான பறையர் என்னும் வகுப்பில் (இப்போது பறையடித்தாலும் அடியாவிட்டாலும் பறையர் என்பது பார்ப்பன அகராதி) ராமஸாமி என்பவருக்கு நமது ஸ்ரீநிவாசன் ஏகபுத்திரன். ராமஸாமி மதுரையில் பூர்வீகமாய் வசித்துவருவதுடன் விவசாயத்தொழிலை மேற்கொண்டு அதனால் தமது குடும்பத்தைக் காப்பாற்றிவந்தார். தமது ஒரே புத்திரனான ஸ்ரீநிவாசனுக்கு அமெரிக்கன் மிஷன் பாதிரியார் ஒருவரின் வாக்கு சகாயத்தால், சிறுவயதிலேயே, அமெரிக்கன் மிஷன் ஸ்கூலில், உபகாரச் சம்பளம் கிடைத்தது. அதனால் ஸ்ரீநிவாசன் கல்வி கற்பதில் ராமஸாமிக்கு விசேஷ கஷ்டமெதுவுமில்லை. ஸ்ரீநிவாசனோ சிறுவயதிலேயே மிகவும் புத்திசாலித்தனத்துடன் கல்வி கற்றுவந்து ஸ்கூல் பைனல் வரையும் படித்து மஹாத்மா காந்தியடிகள் ஆரம்பித்த ஒத்துழையாமையைக் கைக்கொண்டு பள்ளி பஹிஷ்காரத்தை யேற்று படிப்பைவிட்டு, தொண்டர்படையிற் சேர்ந்தவர். சிவசங்கரன் அவர் வகுப்பிலேயே வாசித்து ஸ்ரீநிவாசனுடன் தொண்டர் படையைச் சேர்ந்து தேச சேவை செய்ய முன்வந்த வேளாளர் குலத்தவர்; இவர்கள் இருவரும் மேலே கண்ட சம்பவம் நடந்த பிறகு, ரெயில்வே ஸ்டேஷனில் என்ன நடக்கிறதென்று பார்க்கவந்தனர். காங்கிரஸ் கமிட்டி செக்ரட்டேரி கிருஷ்ணய்யங்காரும் இன்னும் சில பிராமணத் தொண்டர்களும் மோட்டார் கார் ஒன்றில் வந்து சேர்ந்தனர். ஸ்ரீநிவாசனும் சிவசங்கரனும் ரெயில்வே ஸ்டேஷனில் நிற்பதை அய்யங்காரும் கூடவந்தவர்களும் பார்த்தனராயினும் அதை வெளிக்குக் காட்டாமல் சரசரவென்று உள்ளே போய்விட்டார்கள்.

சிவசங்கரன்—அன்ப, ஸ்ரீநிவாசா! கவனித்தாயா அய்யங்காரின் நடத்தையை? வண்டிவரும் நேரமாயிற்று; நாம் பிளாட்பாரம் டிக்கட்டில்லாமல் உள்ளே போகக்கூடாது. பார்ப்பனர்கள் எல்லா உத்தியோகங்களிலும் நிறைந்திருப்பதால் டிக்கட்டில்லாமலிருந்தால் அய்யங்காரின் தூண்டுதலின் பேரில், ஏதாவது சங்கடங்கள் நேரும். நான் டிக்கட்வாங்கி வருகிறேன். நீ இங்கேயே நின்று கவனித்துக் கொண்டிரு.

அப்போது பிராமணத் தொண்டரொருவர் வந்து, திருச்சினாப்பள்ளிக்கு ஒரு பஸ்கிளாஸ் வண்டி டிக்கட்டு வாங்கிக்கொண்டு போனதை ஸ்ரீநிவாசன் கவனித்தானாயினும் பார்க்காதது போலவே யிருந்துவிட்டான்.

சிவசங்கரனும் டிக்கட் வாங்கியாயிற்று; உள்ளே போவோமென்று ஸ்ரீநிவாசனையும் அழைத்துச் சென்றான்; ரெயிலும் வந்துசேர்ந்தது; பலருக்கும் "சத்தியமூர்த்தி அன்று மதுரைக்கு வருவது தெரியுமாதலால், சத்தியமூர்த்தி யிருந்தவண்டியில் முதலாவது கிருஷ்ணய்யங்கார் யேறிக்கொண்டு, மற்றவர்கள் கவனியாதிருக்கும் பொழுதே சில வார்த்தைகளைச் சொன்னார். அதற்குள் கூட்டமும் கூடிவிட்டது.

சத்தியமூர்த்தி—(வெளியில் கூடியிருப்பவர்களைப்பார்த்து) "சகோதர காங்கிரஸ் அபிமானிகளே! இன்று நான் என் சொந்தமும் அவசரமுமான ஜோலியினிமித்தம் புதுக்கோட்டைக்குப் போகவேண்டியதிருப்பதால் இங்கு இறங்கமுடியாமலிருப்பதற்கு மிகவும் வருந்துகிறேன். இங்கு நீங்கள் இவ்வளவு பெருங்கூட்டமாக வந்து என்னைப்பார்க்கவந்தது உங்களுக்குக் காங்கிரஸினிடத்திலுள்ள பக்தியையே காட்டுகிறது. நீங்கள் எப்போதும் காங்கிரஸ் அபிமானிகளாயிருந்து பாடுபடவேண்டியது உங்கள் கடமையாகும். தவிரவும் உங்கள் பிரதிநிதியாகவும், தலைவராகவும் வந்திருக்கும் ஸ்ரீமான் கிருஷ்ணய்யங்காரவர்களுக்கும் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கிறீர்களென்று சொல்வது மிகைபடக் கூறுவதாகாது. ஏனென்றால் ஸ்ரீமான் அய்யங்கார் காங்கிரஸ்கமிட்டி காரியதரிசியாக வந்த பிறகுதான் இவ்வூரில் காங்கிரஸ் வேலைகள் மிகவும் ஒழுங்காகவும் கட்டுப்பாடாகவும் நடைபெறுகின்றன. கள்க்கடை மறியலில் இவ்வூரின் பேர்தான் முதன்மைபெற்றதென்பதும் அதற்கு காரணகர்த்தா யாரென்பதும் நீங்களறியாததல்ல. உங்களெல்லோருக்கும் எனது நன்றி உரியதாகுக என்று பேசிமுடித்தார்.

இதற்குள் சில பார்ப்பனத் தொண்டர்கள் பலகாரங்களையும், காப்பியையுங் கொண்டுவந்து கொடுத்தார்கள். ஸ்ரீமான் சத்தியமூர்த்தியோ பலகாரம் சாப்பிட ஆரம்பித்தார். ஸ்ரீநிவாசனும் சிவசங்கரனும் குழந்தை வந்திருக்கிறாரா; எங்கேயிருக்கிறார் என்று தேட ஆரம்பித்தார்கள். வந்திருந்தாலல்லவோ காணமுடியும்? வண்டிகளெல்லாம் தேடிப்பார்த்த பின்பு குழந்தை வருகிறாரென்று சொன்ன வார்த்தைகள் மோசமென்று தெரிந்துகொண்டார்கள். ரெயிலும் புறப்பட்டது; சத்தியமூர்த்தியும் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார். எல்லோரும் தங்கள் தங்கள் இருப்பிடஞ்சென்றனர். ஸ்ரீநிவாசனும் சிவசங்கரனும், சுப்பிரமணியன் வீடு வந்து சேர்ந்தனர்.

சுப்பிரமணியன்—நண்பர்களே, என்ன விசேஷம்? எங்கோ அலைந்துவிட்டு வந்தமாதிரியிருக்கிறதே. எங்கே சென்றிருந்தீர்கள்? பார்ப்பனர்களால் ஏதாவது சூழ்ச்சி செய்யப்படுகிறதா? தயவு செய்து தெரியப் படுத்துங்கள்.

சிவசங்கரன்—சகோதரரே, தாங்கள் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மையாயிற்று. சென்னையில் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், குழந்தையை ஒரு கை வாணமாய் வைத்துக் கொண்டு வேலைசெய்து வருகிறாரல்லவா? அந்த குழந்தையைப்பார்க்க வேண்டுமென்று நாங்கள் ஆசை கொண்டோம். இதை அறிந்து கொண்ட கிருஷ்ணய்யங்கார், நாங்கள் துரிதமாய் வேலைகளைக் கவனிப்பதற்காக எங்களிடத்தில் குழந்தையும் வருகிறார் என்று சொன்னார் போலிருக்கிறது. நாங்கள் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போயிருந்தோம். திரு. சத்தியமூர்த்தியும் போட்மெயிலில் வந்தார். 20 பேர்வரையும் கூடியிருந்தார்கள். திரு. மூர்த்தி சொந்த ஜோலியாய் அவசரமாய் புதுக்கோட்டைக்குப் போவதால் இறங்க முடியாமலிருக்கிறதென்று சொல்லிவிட்டார். குழந்தை வந்திருக்கிறாரா வென்று வண்டி முழுதுந் தேடிப்பார்த்தோம். அவர் வரவே காணோம்.

ஸ்ரீநிவாசன்—நண்பரே! தங்களிடம் ஒரு சங்கதி சொல்ல மறந்துவிட்டேன். பார்ப்பனத் தொண்டராகிய கோதண்டராமன், தாங்கள் பிளாட்பாரம் டிக்கட்வாங்கச் சென்றிருந்தபோது அவசரமாய் வந்து திருச்சினாப்பள்ளிக்கு ஒரு பஸ்ட்கிளாஸ் டிக்கட் வாங்கிச்சென்றான். வண்டிவரும்போதே கவனித்துக் கொண்டிருந்த கிருஷ்ணய்யங்கார், வெகு அவசரமாய், சத்தியமூர்த்தியிருந்த வண்டியிலேறி ஏதோ ரகசியமாய்ச் சொன்னார். உடனே சத்தியமூர்த்தியும் புதுக்கோட்டைக்குப் போவதாய் பல்லவி பாடிவிட்டார். இவர்களின் கட்டுப்பாடான முயற்சிகளும் அவர்கள் நோக்கமறிந்து செய்யும் சாகசங்களும் என்னை பிரமிக்கச்செய்துவிட்டன. எவ்வளவோ அன்பு, ஆசையுமாய் இன்று காலைவரை பேசி வந்த கிருஷ்ணய்யங்கார் துரைஸாமி அய்யங்கார்வீட்டில் நம்மைக்கண்டவுடன் அவர் பேசிய இருச் சொல்லலங்காரப் பேச்சுகளும், மணவாள அய்யங்கார் என்னைத் திட்டியபோது யாதொன்றும் மறுத்துக் கூறாதிருந்து விட்டதும் ரெயில்வே ஸ்டேஷனில் நம்மைப்பார்த்தும், பாராததுபோல போய்விட்டதும் சத்தியமூர்த்தியிருந்த வண்டியிலிருந்த போது என்னைப்பார்த்தவுடன் அவர் முகம்போன போக்கும், சத்தியமூர்த்தியிடம் என்னைச் சுட்டிக்காண்பித்ததையும் பார்த்தால், என்மீது அவருக்கு பெம்பவும் பற்றுள்ளாது போல நடித்ததற்கு நேர் விரோதமாயிருக்கின்றனவே. இவ்வளவு கொடிய விஷப்பூச்சுகளென்று நான் இதுவரையும் கேள்விப் பட்டதில்லையே. பாரததேவி இத்தனை கொடிய குணம் நிறைந்து இரக்கமில்லாத வர்களுமான பார்ப்பனர்களையா தன் மூத்தபுதல்வரெனக் கருதுவாள்? இல்லை இல்லை ஒரு நாளும் இல்லை. கொடிய விஷத்தை யுடைய நாகப் பாம்பை நல்லபாம்பென்று சொல்வது போல, இந்தியாவின் ஜீவ நாடியைப்பற்றிக் கொல்லும் குணமுடைய பார்ப்பனருக்கா பிராமணன் என்னும் பேர்! அந்தோ! அந்தோ! பாரதத்தாயே பிராமணீயமென்னும் கொடிய விஷம் எங்கள் ரத்தத்திநின்றும் வெளிப்பட அருள் செய்யமாட்டாயா?

சுப்பிரமணியன்—நண்ப ஸ்ரீநிவாசா, பொறு பொறு எவ்வளவுதூரம். பாரதத்தாயை வேண்டினாலும் அவள் செய்யக்கூடியது ஒன்றுமில்லையே, அவளுடைய உடம்பே பிராமணீய விஷத்தால் நிறைந்து விட்டதென்பதை நீ கவனிக்கவில்லையா? இதை நீக்குவதற்காகவே, பல காலத்தில் பல மகான்கள் பாடுபட்டார்கள். பகவான் கௌதம புத்தர் சரித்திரம் உனக்குத்தெரியாதா? அவர்தான் பிராமணீயத்தைத் தொலைக்க எழுந்தவர்களில் பெரிய மகான். அவருக்கு முன்பும் பின்பும் பல பெரியோர்கள் பார்ப்பனச் சூட்சிகளை வெளியிட்டு அடக்கிவந்தார்கள். ஆயினும் இன்னும் பார்ப்பனீயம் தொலைந்தபாடில்லை. ஆனால் அதன் உயிர் போய்விட்டது. உடல் கிடந்து அழுகி நாற்றமுண்டாகி முன்னிருந்ததைப் பார்க்கிலும் அதிக துன்பத்தை யுண்டாக்கிறது. நீ கொஞ்சம் யோசித்துப்பார். பார்ப்பனரல்லாதாரே பார்ப்பனச் சவத்துக்குப் பூஜை செய்கிறார்கள். அதற்கு மாலை சாத்துகிறார்கள். வாசனையூட்டுகிறார்கள். பார்ப்பனரல்லாதாருக்குச் சுய மதிப்பையுண்டாக்குவதற்காகவே பார்ப்பனரல்லாதாரியக்கம் உண்டாயிற்று. இதையறிந்து நடப்போர், நூற்றில் ஐந்துபேராவது இருக்கிறார்களா? பார். பார்ப்பனன் கெர்ப்பத்தில் 360 நாளும் பார்ப்பனரல்லாதார் 300 நாளுமிருந்து வந்தனரா? பார்ப்பனர்களில் புத்திமான்களிருந்ததுபோல பார்ப்பனரல்லாதாரில் இல்லையா? எல்லா வல்லமைகளும் பிராமணரல்லாதாரிடத்திலிருந்தும், ஏன் மயங்குகிறார்களென்று யோசித்துப்பார். அவர்களைக் கட்டியிருக்கும் நாகபாசமொன்றிருக்கிறது. அது உன் கண்ணுக்குத் தெரியவில்லையா? தெரிந்தால் சொல்பார்ப்போம்.

ஸ்ரீநிவாசன்—அன்பரே, தங்களுடைய கேள்விக்கு விடை சொல்லுதல் என்கடமையே. நான் ஒரு சுயமதிப்புள்ளவனுயிருந்தால், அந்த நாகபாசம் எது வென்பதை வெளிப்படுத்த வேண்டியதும் அவசியமே. அந்தக் கடமையை நான் மறந்திருந்தது என் குற்றமென்பது இப்போதுதான் அறிகிறேன். நம்மைக்கட்டி யிருக்கும் நாகபாசம் வருணாச்சிரம தருமம் என்று சொல்லுவதில் குற்றமுளதோ?

(அதற்குள் சிவசங்கரன்
இடைமறித்து.)

சிவசங்கரன்—சகோதரா. ஸ்ரீநிவாசா! பார்ப்பனர்தான் வருணாச்சிரமதருமத்தை ஆதரிக்கிறார்களே தவிர மற்றவர்கள் அதை ஆதரிக்கவில்லையோ? நீ சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதில்லை. நமக்கும் வருணாச்சிரமதருமத்துக்கும் சம்பந்தமில்லை. ஆகையால் நம்மைப் பிணித்திருப்பது பிரிட்டானியமே தவிர பிராமணீயமல்லவென்பதை அறியவேண்டும். பிரிட்டானியம் ஒழிந்தால் நமது தேசத்தின் அடிமைத்தனம் ஒழியும். அப்பொழுது நமக்கு சுயராஜ்ஜியம் சித்திக்கும். நம் நாடும் நமது ஜனங்களும் சுகமடைவார்களென்பதில் ஐயமேயில்லை.

ஸ்ரீநிவாசன்—நண்ப சிவசங்கரா! அவசரப்பட்டு ஒரு முடிவிற்கு வரவேண்டாம். நன்றாய் யோசனை செய்துபார். உன்னையாராவது என்ன ஜாதி என்றால் வேளாளர் என்று மிகு கௌரவதையாய்ச் சொல்லுகிறாயல்லவா? உன் தொழிலென்ன? நீ வேளாண்மை செய்கிறாயா? உன் சொந்தப்பணத்தையுஞ் செலவுசெய்து கொண்டு தேசத்துக்குத் தொண்டுசெய்யும் போது நீ யேன் வேளாளனென்று சொல்கிறாயென்று யோசித்துப்பார்த்தாய? அது தான் உன்னுடம்பில் ஊறிப்போன வருணாசிரம தரும விஷம். பார்ப்பனன் உன்னை சூத்திரன் என்கிறான். என்னை பஞ்சமன் என்கிறான். நீயாவது நானாவது எந்த ஜீவனுக்கும் தீங்கிழைக்கிறோமா? அல்லது மதுவுண்டு மகிழ்கிறோமா? புலாலுண்டு புலையரானோமா? ஒரு நாளும் நம்மிருவரிடத்திலுமில்லாத தீமைகளை நம பேரிலேற்றுவது வருணாச்சிரம தருமமல்லவா? சாதாரணமாய் எத்தனையோ வக்கீல் பார்ப்பனர்கள் பிராந்தியையும் ஒயினையும் ரகசியத்தில் குடித்து மகிழுகிறார்கள்! ரெயில்வேயில் ரெப்பிரஸ்மெண்ட்ரூமில் புலாலுண்போர் எத்தனையோ! அவர்களுக்கு பஞ்சமன் என்ற பேருண்டா? பார்ப்பான் என்றல்லவா பார்ப்பனரல்லாதாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஹிந்துமதமானது சத்தியம் அன்பு அஹிம்சை தத்துவஞானம் என்னும் அடிப்படையின்மேல் கட்டப் பட்டிருந்ததை பார்ப்பனர் வருணாச்சிரம தருமப் பாசத்தால் கட்டிப்போட்டனரென்பது நிச்சயம். பார்ப்பனருக்குக் கீழ்ப்பட்டவனென்று நீயே ஒத்துக்கொண்டு வருணாச்சிரம தருமத்தைப் பற்றி நமக்கு அவசிய மல்லவென்று சொல்வது வெட்கக் கேடல்லவா? பார்ப்பனர் நம்மை அடிமையென்று சொல்கிறார். பிரிட்டிஷார், பார்ப்பனனும் நாமும் அவனுக்கு அடிமை யென்று சொல்கிறார்கள். நம்முடைய பிடரியிலிருந்து கொண்டே நம்மை யடக்கி வைத்திருக்கும் பிராமணீயத்தை நாம்

[இதன் தொடர்பு 8-ம் பக்கம் பார்க்க]

வேம்பின் விசேஷம்.

ஸ்ரீமான் தேவராஜ முதலியார் எழுதியது.

வேம்பு என்னும் விருக்ஷம் நம் இந்தியாவில் யாவருக்கும் தெரிந்ததும், அதிக உபயோக முள்ளதும், தேவியாகப் போற்றத் தக்கதுமான ஒரு வகை மரம். இந்த சாதாரணமான வேம்பின் விசேஷங்களையே இங்கு வரைகிறோம்.

கரு வேம்பு, சில வேம்பு, மலை வேம்பு, சீவனார் வேம்பு என இத்தனை வேம்பு வகைகள் இருப்பினும் அவைகளைப் பற்றிப் பின்பு எழுதப்படும்.

வேம்பின் உற்பத்தியைப் பற்றி வேத சாஸ்திரங்களில் அரிய வரலாறு ஒன்று இருக்கிறது. அவ்வேம்பு வாய்க்குக் கசப்புள்ளதாக இருந்த போதிலும் இதனை ஏன் இவ்வளவு போற்றிப் புகழ்ந்து அமிர்தத்திற்கு சமமாகக் கொண்டாடுகிறார்களென்பதின் காரணம் கீழ்க்கண்ட புராணக் குறிப்பினாலும், அதன் அதிசய உபயோகங்களினாலும் நன்கு விளங்கும்.

தேவர்களும் அசுரர்களும் அமிர்தபானம் செய்வதின் நிமித்தம் திருப்பாற்கடலைக் கடைந்தபோது, அந்த திவ்யாமிருதத்தை அசுரர்களுக்குக் கொடுக்கா வண்ணம் விஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து தேவர்களுக்குக் கொடுத்துக் கொண்டு வர ஒரு அசுரன் இது ஒரு வஞ்சனைச் சூழ்ச்சியென அறிந்து, தெரியாமல் தாம் போய் தேவர் பந்தியில் நின்று அமிருதத்தை வாங்கிப் பானம் செய்து சிரஞ்சீவித் தன்மை பெறலாமென வந்து கையேந்தினான். அதனை அறியாத மோகினி ரூப விஷ்ணு அமிருதத்தைக் கொடுத்து, உடனே தவறை உணர்ந்து, அவ்வசுரனின் தலை தெறிக்கச் சக்கரத்தை எவினார். அதற்குள் அவன் பானம் செய்த அமிர்தம் வயிற்றினின்றும் கீழிறங்கவில்லை, வாயிலிருக்கவையும் உமிழ்ந்து விட்டான். அவ்விதம் சேதிக்கப்பட்ட தலையும் முண்டமும் அவ்வமிருத ஸ்பரிசத்தினாலே இன்னும் சிரஞ்சீவியாய் ராகு கேதுக்களாகிய கிரகங்களாய் விளங்குகிறார்கள். அவ்விதம் உமிழ்ந்த அமிருதம் பூமியில் வேம்பாக உற்பவித்ததென்றும் வாயினின்று உமிழ்ந்ததால் கசப்புக் குணம் ஏற்பட்டது. ஆயினும் இதன் குணங்களால் இது அமிருதத்தையே ஒக்கும்.

வேம்பில் சகல சத்து இருப்பதால் புண், புரை, ரணம், கிருமி, குஷ்டம், ரோக நீர் இவற்றைத் தீர்ப்பதில் இது சிறந்தது. கிருமியால் பல வியாதிகள் உற்பவிப்பதால் அக்கிருமி சம்பந்தமான முறைச் சுரம், காய்ச்சல் கட்டி, விஷ ஜ்வரம் என்னும் விஷபேதி, அம்மை முதலியவைகளும் தீர்கின்றன.

[illegible] சென்ற வேப்பம் பட்டைக் குடிநீரைத் தினம் ஒரு வேளை நெய், சர்க்கரை, வெல்லம் முதலியவற்றைச் சரீரத்திற்குத் தக்கவிதமாய்க் கலந்து உண்டுவரப் பல வியாதிகளையும் நிவர்த்தி செய்து வாத பித்த கபம் என்னும் முத்தோஷங்களையும் பரிகரித்து, சரீர பலம் கொடுத்து, ரத்த சுத்தி செய்து, நரை திரைகளையும் போக்க வல்ல ஒரு கல்பமாகும். ஆனால் கல்ப விதிகளை அனுசரித்துச் சேர்க்க வேண்டும்.

வேப்பிலையை அரைத்துச் சம இடை புழுங்க லரிசியுடன் சேர்த்துப் பிசைந்து, புதுச் சட்டியிலிட்டு வறுத்துக் கருகிவரும் சமயத்தில் வேண்டிய அளவு ஜலம் விட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டிய கஷாய நீர் தெளிவு பேதி, அஜீர்ணம், மந்தம், குன்ம வலி, பேதி இரைச்சல், வாயு, ஜ்வர பேதங்கள், வாந்தி, அதனுடன் கூடிய விஷ பேதிகள் இவற்றைப் பரிகரிக்கும்.

இதன் சர்க்கரைத் தக்கப் போக்கின் [illegible]

வேம்பின்பட்டை சமூலமும் இரண்டும் சம இடை எடுத்துக் கஷாயம் போட்டுக் கொடுக்க அனேக ரோகை [illegible] ஜ்வரங்களும், பித்தக் காய்ச்சல்களும் தீரும்.

வேம்பின் பூ நவரசத் [illegible] என்னும் ஒரு பாகத்தில் முக்கிய வஸ்து. இது அரோசகத்தை மாற்ற அரசனைப் போன்ற வல்லமையுடையது. தமிழ் மக்கள் வருஷப் பிறப்பில் இந்தப் புஷ்பத்தைத் தீம்பாகுடன் சேர்த்து மாங்காயும் புளியும் விரவிச் சமைத்து ஒரு பச்சடி செய்வதுண்டு.

வேம்பின் முதிராத காய்களை இடித்துப் பாலைப் பிழிந்து அதனால் ஜாதிலிங்கத்திற்கு வேண்டிய வரை சுருக்கிட்டு, அந்த கட்டைத் தேனில் போதுமான அளவு இழைத்துக் கொடுக்க, மகாவாதம் வாய்வு, வலி, வலிப்பு, குடைச்சல், ஜ்வரம், விஷபேதி முதலிய பல அசாத்திய ரோகங்களைக் கண்டிக்கும். இந்தக் காய்ப்பாலைக் கொண்டு இன்னும் அனேக மருந்துகளையும் முடிக்கலாம். அதில் இந்த மூலிகை விசேஷம் சேர்ந்த குணம் விசேஷ மாகுமென்பதே இங்கு அறிய வேண்டிய உட்குறிப்பாகும்.

வேப்பம் விதை மிகவும் உபயோகமான வஸ்து. இதனைச் சடி வைத்துச் செக்கிலாட்டி எடுத்த வேப்பெண்ணெய் கிடைக்கிறது. இது மிகவும் உபயோகமான தைலங்களில் ஒன்று.

இதுவும் முறைப்படி வாதம் முதலிய முக்கிய வியாதிகளைத் தீர்ப்பதில் சிறந்தது. இதனை உள்ளுக்குக் கிருமிகளை அழிக்கவும் கொடுக்கப்படுகிறது. இது நெருப்பிற்கு சமமானது. இதை அண்டத்தைலம் என்னும் பாகத்திலும் மூன்று முட்டை எண்ணெயிலும் ஐங்கூட்டு எண்ணெயிலும் உபயோகப் படுத்துகிறார்கள். [illegible] இரண்டாம் பாலை மூலிகையும் இந்த எண்ணெயும் நீக்காத கிருமி ரணங்கள் கிடையாது. வேம்பின் எண்ணெயை நெய்யாக்கும் பாகம் மிகவும் சிறந்தது.

இந்த வேப்பங் கொட்டையை விஷ வைத்தியத்திலும், குஷ்ட சிகிச்சையிலும், சித்தர்கள் கூறியுள்ள பஞ்ச கல்ப என்னும் முறையிலும் சொல்லியிருக்கிறது.

இதன் கட்டை மிகவும் நல்ல விறகாகும். இதனால் எரிக்கப்பட்ட எந்த பாகமும் செம்பாகமா யாகுமே யல்லாது காஷ்ட அக்கினி தோஷம், எரி துரும்பின் அக்கினி குண மாறுதல் உண்டாகாது.

வேம்புலி அம்மன் என்றும் வேம்படி விநாயகர் என்றும் வேம்பினடியில் தெய்வங்கள் பிரதிஷ்டித் திருப்பது இதன் விசேஷ மகிமையைக் குறிப்பிடுகிறது. இதன் காற்று ஒன்றினாலேயே நோயற்ற வாழ்வும் தீர்க்க ஆயுசும் கைவல்யமாம். வேம்பும் அரசும் சேர்ந்து இணைந்து பிணைந்து வளர்ந்து நிற்கும். இவ்விரண்டு மரங்களையும் தரிசனம் செய்வதே ஒரு பெரிய விசேஷமாக நம்மவர் கருதுவதும் அதன்படி பிரதிஷ்டை செய்வதும் இதன் குண விசேஷத்தினாலே யன்றோ?

நாட் சென்ற மரத்தில் ஓர்வித வெள்ளை நிறமான பால் போன்ற கள் இறங்குவதுண்டு. இதைத் தினம் காலையில் குடித்து வரப் பலவித வியாதிகள் தீருகின்றன. நாட்பட வைத்திருந்த பின் கள்ளைப் போல மிகவும் புளித்துப் பொங்கி காடியாக மாறிவிடுகின்றது. அது பால் சொரியும் காலத்தில் இம் மரம் மிகவும் பூஜிக்கப்பட்டு வருகிறது. இவ்விதம் பால் சொரிவது ஓர் அபூர்வ காட்சிதான். இது எங்கும் எல்லா மரங்களுக்கும் கிடையாது. அப்படி வடிவதும் கொஞ்ச காலந்தான். பிறகு பால் மாறிப் போகிறது.

இதன் [illegible] மிச்சம் [illegible] முதலியவைகளையும் வேண்டிய சம்பாரங்களையும் சேர்த்து இடித்துக் கட்டியாக வைத்துக் [illegible] யோகப்படுத்துவது வழக்கம். இதனை வேப்பிலைக் கட்டி என்று வழங்குவார்.

வேப்பிலையை நன்றாய் உலர்த்திப் பொடி செய்து கொஞ்சம் சோடா உப்பைச் சேர்த்து பல் துலக்குவதற்கு உபயோகிக்கலாம்.

வேப்பிலையை நன்றாய் அரைத்து அம்மைப் புண், மற்றும் பெருஞ்சிரங்கு, கட்டி, கிருமி ரணம் முதலியவை கட்டுவைத்துக் கட்டலாம். இதன் கஷாயத்தினாலும் அலம்பலாம்.

எப்படி அப்பியாசத்தினால் ராக ஞானம் உண்டாகிறதோ, எவ்விதம் அப்பியாசத்தினால் சாதனைகளும் கைவல்யமாகிறதோ, அவ்விதம் இவ் வேம்பையும் விடாமல் தின்று அப்பியசிக்க மிகவும் தித்திப்பாயிருக்கும் என்று வேமன்ன பத்தியத்தில் கூறியிருக்கிறது. இவ்விதம் வேம்பை விடாமல் தின்பவர்கள் பலரை நான் சந்தித்திருக்கிறேன். அவர்களுக்கு நல்ல தேக வன்மையும் ஆரோக்கியமும் பொலிவும் திகழ்ந்திருந்தன. வேப்பிலையை ஆகாரமாக ஒருவர் பதினெட்டு வருஷகாலமாகக் கொண்டிருந்தார். பால் மாத்திரம் கூடச்சாப்பிடுவது வழக்கம். அவருக்குப் போகுமிடமெல்லாம் பச்சை வேப்பிலை கிடைக்குமோ என சந்தேகித்துக் காய்ந்த வேப்பிலையை பத்திரம் பண்ணி எடுத்துக்கொண்டு போவது வழக்கம்.

வேம்பின் காய்ந்த இலைகளை ஒரு புதுச் சட்டியில் போட்டு மேல்சட்டி மூடி நன்றாய் எரிக்கத் தீய்ந்து எரிந்த வெண்மையான பஸ்பமாகும். இதனை நெய்யில் பண வெடை உட்கொண்டுவர, குன்மம் வயிற்று வலி முதலிய வியாதிகளைத் தீர்க்கின்றது.

வேம்பின் குச்சியால் பல் துலக்கி வரலாம். இது பல்லின் கிருமிகளை நன்றாய் அழிக்கும்.

வேப்பிலையை நன்றாய் அரைத்து இதனுடன் மஞ்சள் கருஞ்சீரகம் இவற்றையும் சேர்த்துப் பாகோடு சேர்த்துக் கிளறி லேகியம்போல் செய்து பிரசவித்த ஸ்திரீகளுக்குச் சிலர் கொடுப்பது வழக்கம்.

எவ்விதத்திலும் வேம்பு உபயோகமுள்ளது. இதன் பிசினைச் சாப்பிட்டு வர நல்ல தாது விருத்தியை உண்டாக்கும்.

ஜ்வரங்களைத் தீர்ப்பதில் இது கொயினாவை விட மிகவும் மேலானது. ஜ்வரத்தை குணஞ்செய்யும் கொயினா உஷ்ணம் செய்து காது மந்தம் நரம்பு கெடுதி முதலியவைகளைச் செய்கிறது. இந்த வேம்போ குணம் செய்து பலமும் செய்கிறது. எவ்வளவு நாள் சாப்பிட்டாலும் கொயினாவைப் போல் கெடுதிசெய்கிறதில்லை. சில வருஷங்களுக்கு முன்பு பரவிய இன்புளுவன்சா என்னும் கபவாத ஜ்வரத்தில் இதன் பட்டைக் கஷாயம் தான் தலை சிறந்த ஒளஷதமாகத் தெரிந்தெடுக்கப்பட்டு அநேக ஜீவர்களைக் காப்பாற்றியது. இதனை ஆங்கிலேயர் அச்சமயத்தில் மிகவும் கொண்டாடினதோடு மருந்துகள் பல இதனின்றும் செய்துவருகிறார்கள். வேப்பிலை நீர்ச்சத்து அவர்கள் தயாரித்து உபயோகப்படுத்தி வருகிறார்கள். இதனின்றும் சவுக்காரங்கள் தயார் செய்து ரணத்திற்கு உபயோகப் படுத்துகிறார்கள். தோல் வியாதி யாவற்றையும் தீர்ப்பதில் இது சிறந்தது.

இதன் உற்பத்தி விவரத்தில் இது அமிருதமே யென நன் கறிந்தோம், அதற்கொப்பவே இதன் பட்டை, விறகு, இலை, தளிர், பூ, பிஞ்சு, பழம், எண்ணெய், பால் பிசின் முதலிய யாவும் உயர்ந்த குணங்களையே நமக்குக் கொடுப்பதாயிருக்கின்றன. ஆகவால் இதனை எவ்விதத்தும் போற்ற வேண்டும். புளியமரத்தை அஞ்சாமல் வெட்டலாம். ஆனால் வேப்ப மரத்தை வெட்டுவதானால், மிகவும் உபயோகமுள்ள ஒரு உண்மை நட்பாளன் இறந்து போவது போலாகும். இது ஓர் உண்மையான வாழ்க்கைத் துணை [illegible] இதனை எவ்விதத்திலும் இருக்கும் மரம் [illegible] இவ் வேம்பினை அம்பாளைப் போற்றிப் பணிசெய்யவேண்டும். வேம்பு என்றும் மல்கிப் பல்குக. வேம்பு என்றும் வாழ்க! வாழ்க !!

விகடத் துணுக்கு.

வியாபாரி:—ஐயா! இக்காவலைக் கையிலெடுத்து வாசிக்க ஆரம்பித்தால் தங்களின் தொழிலையும் மறந்து இக்கதையிலே தங்களின் கருத்தைச் செலுத்தி இதைப் படித்து முடித்த பின்னரே மற்ற அலுவல்களைக் கவனிக்கச் செய்யும்.

மற்றவர்:—ஆகா! அப்பேர்ப்பட்ட நாவலானால் அது நமக்கு வேண்டாமப்பா.

வியாபாரி:—ஏன் ஐயா தாம் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

மற்றவர்:—தாம் சொல்வதிலிருந்து இந்நாவலை வாசிப்பதால் என் தொழிலுக்கும் பங்கம் ஏற்படும் போல் தெரிகிறது. தொழிலைச் செய்தாலன்றோ குடும்பத்தை நடத்த முடியும்? இந்நாவல்தான் தொழிலையும் மறந்து இதிலேயே தன் கருத்தைச் செலுத்தும் என்பதாகச் சொல்கிறீர்களே!

எஜமான்:—அடே ராமா! ஏனடா பூஞ் செடிகளெல்லாம் வாடிப் போகின்றன?

ராமன்:—வேரெல்லாம் பூச்சி தின்னுதுங்கோ.

எஜமான்:—அப்படி யானால் அதற்கென்ன செய்யலாம்?

ராமன்:—சுடு தண்ணீர் ஊத்தினால் பூச்சி யெல்லாம் செத்துப் போவுங்க.

உப. சி. மா. ராயப்ப நாடார்.

துண்டுத் துணுக்குகள்.

உலகத்திலேயே மிகச்சிறியதான ரெயில்வே லயன் கெண்ட் என்ற விடத்தில் ஸ்தாபித்திருக்கின்றனர். இதன் இருதண்டவாளங்களுக்கு மிடையிலுள்ள தூரம் 15 அங்குலமேதான். இஞ்சின் 8 டன் நிறைதானிருக்கிறது. இது 25 வண்டிகளை இழுத்துக் கொண்டு 50 மைல் வேகத்தில் பிரயாணம் செய்கிறதாம்.

துருக்கியில் ஜனக்கணிதம் எடுக்க வேண்டுமாயின் அன்று பூராவும் யாரும் வீட்டைவிட்டு வெளியில் போகக் கூடாதாம். அன்றொரு ஓய்வு நாளாக யாதொரு போக்குவரத்துமின்றிக் கழியும்போலும்.

உலகத்தில்

புத்தசமயத்தினர்	60 கோடி
கிறிஸ்தவர்கள்	50 கோடி
முஸ்லீம்கள்	33 கோடி
ஹிந்துக்கள்	20 கோடி
பிராமணர்	1½ கோடி

காலவரை.

புத்தசமயம் ஏற்பட்டு	2469 வருஷங்கள்
கிறிஸ்து மதம்	1927
இஸ்லாம் மதம்	1343
ஹிந்து மதம்	அனாதி,
பிராமணீயம்	1960852976.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ருக்கும் எல்லா கவலைகளையும் கடவுள் கொடுப்பாராக.

இனிமேல் யோகிகளைப்பற்றிக் கிடைக்கும் சரித்திரங்களையும் நடைபெறும் சம்பவங்களையும் அடுத்த பதிப்பில் வெளிப்படுத்தலாகும். ஓம்.

குறிப்பு:—இம் மகானைப் பற்றி சுமார் ஒரு வருட காலமாகக் கேள்விப்பட்டு அவரை நேரில்பார்க்க வேண்டுமென்ற அவா மேலிட்டு வந்தது. 13-8-27ல் நமது நண்பர்கள் நால்வருடன் 22 மைலுக்கப்பாலுள்ள பெருநாழிக்குச் சென்று சுவாமிகளின் தவக்கோலத்தைக் கண்ணுற்றோம், தேகமெங்கும் பூரண ஒளிவீசக் கண்டு தெரிசித்தோம்.

பெருநாழிக்கு மூன்று மைலுக்கப்பாலுள்ள ஓர் மடத்தின் மேன்மாடியில் யோகிகளின் தன்மை ஆதிமூலத்தம்மான் செய்யும் அகோர தவத்தைக் கண்டு அஞ்சினோம். இவர்களுடைய [illegible] நடக்கும் சம்பவங்களைப்பற்றி எழுதப்போகும் சரித்திரத்தையும் நீட்டி வெளியிடக் கடவுள் கருணைபாலிப்பாராக.